# காற்றில் செதுக்கிய கருவூலங்கள்

தூதர் வழித் தூயமொழி

புலவர்மணி
ஆ.மு. ஷரிபுத்தீன்

தொகுப்பாசிரியர்
ஹுணுகலை - ஸ்ரீ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காற்றில் செதுக்கிய கருவூலங்கள்

தூதர் வழித் தூயமொழி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காற்றில் செதுக்கிய கருவூலங்கள்

## தூதர் வழித் தூயமொழி

புலவர்மணி ஆ.மு.ஷரிபுத்தீன்

தொகுப்பாசிரியர்: லுனுகலை ஸ்ரீ

அன்னனை வெளியீட்டகம்

மருதமுனை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| Name of the book | : | Kaarril Sethukkiya Karuvoolankal |
| Author | : | Pulavarmani A.M. Sherifudeen |
| © | : | Mrs.Hamziya Fareeda Sherifudeen<br>No.16, School Avenue<br>off Station Road, Dehiwela<br>Sri Lanka<br>Tel.: 011-2730378 Mob: 0772721244 |
| Number of Copies | : | 1000 |
| Published in | : | 4th May 2017 |
| Published by | : | Annai Veliyeetagam, Maruthamunai |
| Cover designed by | : | Ashiff Buhary |
| Printed by | : | Kumaran Book House<br>39, 36th Lane, Colombo-06 |
| ISBN | : | 978-955-0112-03-5 |
| Price | : | Rs. 400/= |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதிப்புரை

புலவர்மணி ஆ.மு.ஷரிபுத்தீன் அவர்களின் இவ் வெண்பாத் தொகுப்பினை அன்னாரது 108ஆவது அகவையை முன்னிட்டு அன்னை வெளியீட்டகத்தின் சார்பாக வெளியிடுவதில் நாம் பெருமை கொள்கின்றோம். இறுதி நபியின் இதோபதேசங்கங்களைக் கற்றவர்கள் எளிதில் நெஞ்சிருத்திக்கொள்ள, புலவர்மணிக்கு வாலாயமான வெண்பா யாப்பில் இச் செய்யுள்கள் படைக்கப் பெற்றுள்ளன. வயது முதிர்ந்த காலத்திலும் தெளிவான சிந்தனையோடு வாழ்ந்தவர் புலவர்மணியவர்கள். வாய்ப்பு ஏற்படும் போதெல்லாம் திருநபி வார்த்தைகளைக் கிடைத்தவற்றில் தானோ, எழுத இயலாதபட்சத்தில் பிறரைக் கொண்டோ பதிவுசெய்தவைகள்தான் இக் கருவூலங்கள்.

நீண்டகாலம் உதிரியாய் தொகுக்கப்பெறாமல் கிடந்தவற்றைத் தொகுத்தளிக்கும் பாரிய பொறுப்பினைத் தானாகவே முன்வந்து ஏழு வருடத் தொடர்முயற்சியால் இத் தொகுப்பினை கோத்தளித்துள்ளார் கவிஞர் லுணுகலை ஸ்ரீ அவர்கள். வெண்பா யாப்பில் நல்ல பரிச்சயம் உடையவர் அவர் என்பதால் பொறுப்பை நம்பி அவரிடம் தந்தோம். அதனை அவர் சரிவரச் செய்தளித்துள்ளார்.

2009ஆம் ஆண்டில் எம்மால் அகில இலங்கை ரீதியில் நடத்தப்பெற்ற புலவர்மணியின் நூற்றாண்டு நினைவு வெண்பாக் கவிதைப் போட்டியில் ரூபா இருபத்தைந்தாயிரம் பணப்பரிசுடன் முதற்பரிசு பெற்றவர் கவிஞர் லுணுகலை ஸ்ரீ அவர்கள்.

பாயிரம் இன்றேல் பனுவலில்லை என்பதற்கிணங்க இத் தொகுப்பினை மேலாய்வு செய்து, பாயிரமும் பாடியளித்துள்ளார் புலவர்மணியைத் தனது ஆதர்ஷ குருவாய் வரித்துக்கொண்ட தமிழ்மாமணி அல்அசூமத் அவர்கள்.

திருநபி வாய்மொழிகளில் (ஹதீஸ்) பரிச்சயத்தோடு இரண்டாயிரத்துக் கதிகமான நபிக்குறள்களை யாத்ததோடு “யாப்பியலுரை” என்னும் இலக்கண நூலையும் படைத்தவர் அவர் என்பதால், பாயிரம் பாட அவரே பொருத்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மானவர் என நாம் தீர்மானித்தோம். அவரதனைத் திறம்படச் செய்தளித்துள்ளார். அவருக்கு எமது நெஞ்சார்ந்த நன்றிகள்.

பெருமானாரின் பொன்மொழிகள் செய்யுள்களாக ஆக்கப்பெற்றுள்ளதால், அவற்றில் தவறுகள் ஏதும் ஏற்படாதிருக்க அவையனைத்தும் ஆலிம் கவிஞர் காத்தான்குடி பௌஸ் அவர்களால் பரிசீலனை செய்யப்பெற்றுள்ளன. அவருக்கும் எமது நெஞ்சார்ந்த நன்றிகள் உரியதாகட்டும்.

தொகுக்கப்பட்ட தொடக்கத்தில் யாப்பறிந்த புலவர்மணியின் பேரர் பொறியியலாளர் கவிஞர் நியாஸ் ஏ ஸமத் அவர்களால் இவ் வெண்பாக்கள் பரிசீலிக்கப்பட்டன. அவரையும், புலவர்மணியின் ஆக்கங்கள் பதிவுபெற வேண்டும் என்பதில் ஆர்வங்கொண்டு எம்மை ஊக்குவித்த அவர்தம் மாணவர் மருத்துவக் கலாநிதி கவிஞர் தாஸிம் அகமது அவர்கட்கும், எமது மக்கள், மருமக்கள் அனைவரையும் இங்கு நினைவுகூர்வதில் நாம் மகிழ்வடைகின்றோம்.

இந் நூலை வடிவமைத்து அச்சிட்டுதவிய குமரன் அச்சகத்தாருக்கும் எமது நன்றிகள்.

ஹம்ஸியா பரீதா ஷரிபுத்தீன்
மேலாளர்
அன்னை வெளியீட்டகம்
மருதமுனை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெண்பாக்களால் ஆன நாட்கள்

ஆர்வத்துடனும் ஆத்மார்த்தத்துடன் நான் கையில் எடுத்த முதலாவது தொகுப்பு நூல். ஆயினும் இரண்டாவது தொகுப்பாக எடுத்த “வல்லுவம்” நூல் முதலாம் தொகுப்பாக முந்திக்கொண்டதற்கும், முதலாவது தொகுப்பு நூல் இரண்டாவதாக வெளிவருதற்கும் உரிய காரணங்கள் பல உள்ளன.

“காற்றில் செதுக்கிய கருவூலங்கள்” இந்த பெயரை தெரிவு செய்யவே மூன்றான்றுகள் முடிந்திருக்கின்றன. காரணம் இன்று புலவர்மணி ஐயாவால் வெளியான இத்தனைக் கருத்துகளும் அன்று உம்மி நபியால் கூறப் பட்டவையே. இன்றுபோல் இலத்திரனியல் ஊடகங்களோ, இலத்திரனியல் உபகரணங்களோ இல்லாத காலத்தில் கூறப்பட்டவை. அப்படியே இன்றுவரை ஏதோ ஒரு வடிவில் நிலைபெறுகிறது என்றால் அதற்குக் காரணம் அதன் சத்தியம் ஒன்றே என்பதை தவிர வேறு சொல்ல வார்த்தை இல்லை.

ஒரு நீண்ட உழைப்பிற்குப்பின் இந்த தொகுதி உரிய வடிவத்தைப் பெற்று வெளிவந்திருப்பது தமிழ் இலக்கியத் துறைக்கு ஒரு பெரும் புலவனின் கவிதைகளைச் சமூகத்திற்கு கையளிக்கும் பெரும்பணியில் என்னை ஈடுபடுத்திக் கொண்டமையை உயர்வாய்ப்பாக கருதுகிறேன். புலவர்மணி ஐயா (எனது மொழியில் அப்பப்பா) தனது 80 வயதிற்கு பின் அவ்வப்போது தனியேட்டுப் பிரதிகளாக எழுதிய சுமார் 1500 வெண்பாக்களைத் தேர்ந் தெடுக்கும் பணி சற்று சிரமமாகவே இருந்தது.

முதலாவதாகப் புலவர்மணி ஐயா அவர்களின் கையெழுத்தைப் புரிந்து கொள்ளவே நெடு நாட்கள் எடுத்தன. காரணம் எழுத்துகளில் முதுமையின் நடுக்கம் இருந்தன. (ஆனால் இலக்கணம் இளமை மிடுக்குடன்தான் இருந்தது. என் தலைமுறையினர் அறியாத எழுத்துகள் பயன்படுத்தப் பட்டிருந்தன. (உ-ம்: லை, ளை, னை, ணை, னா, ணா போன்றவை வேறு வடிவில் இருந்தன. தவிரவும் மெய்யெழுத்துகளுக்கு ஒற்று இருக்காது. வெண்பா இலக்கணத்துக்கு அமைய இந்த இந்த இடங்களில் ஒற்று வர வேண்டும் என்று நானே ஒற்றுகளை இட்டு தட்டச்சுச் செய்தேன். தொடர்ச்சியான வாசிப்பின் பின் எழுத்துகள் வாலாயப்பட்டு போனது. ஆனால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வார்த்தைகள் புரியவில்லை. நானறியாத அறபுச் சொற்கள் அநேகமான இடங்களில் சீராக நின்றும் வந்தும் இருந்தன. தோழிகளான கதீஜா, மனூர்ஜன், நிஜ்ரின், சிராஸா போன்றோரின் உதவியோடு அறபுப் பதங்களின் பொருள் புரிந்த போது அவைகளை உரிய தலைப்பின் கீழ்ப் பதிவு பண்ணும் பொழுது இன்னோர் இடர் வந்து நின்றது. புலவர் மணி ஐயா எந்த வெண்பாவையும் ஒரு தலைப்பின் கீழ் எழுதியிருக்கவில்லை. ஒரு தாளில் 10 வெண்பாக்கள் இருக்குமாயின் அந்தப் 10 வெண்பாக்களும் 10 பாடுபொருளைக் கொண்டிருக்கும். மீண்டும் மீண்டும் வாசித்து, தலைப்பிட்டு பொருத்தமான வெண்பாக்களை ஒன்று திரட்டியபோது வெகு நாட்கள் உழைத்துத்த தட்டச்சு செய்த சுமார் 500க்கும் மேற்பட்ட வெண்பாக்களை நிராகரிக்க வேண்டி வந்தது. காரணம் அவைகள் ஏலவே வெளிவந்த நானில காட்சிகள், மக்களுக்கிதோபதேசம், முதுமொழி வெண்பா, சூறாவளிப்படைப்போர், புலவர்மணி செய்த தமிழ் போன்ற நூல்களிலும் வெளியாகியிருந்தன. மேற்குறிப்பிட்ட நூல்களில் இருக்கும் ஏதாவது ஒரு வெண்பா புதிதாகத் தட்டச்சுச் செய்த வெண்பாக்களில் இருக்கின்றதா என அறிய ஒவ்வொரு முறையும் முழுமையாக தட்டச்சு செய்யப்பட்ட 1000க்கும் மேற்பட்ட வெண்பாக்களை அலசி ஆராய வேண்டி வந்தது. அவ்வாறு ஆராயப்பட்ட பின் 600 வெண்பாக்கள் இதுவரை நூல்களில் இடம்பெறாமல் இருப்பது தெரிய வந்தது. அவற்றை வரிசைப்படுத்துதலில் முறைமை அவசியம் எனத் தோன்றிய போது சலாம் முதல் சலவாத்து வரை வைத்தல் பொருத்தமென அந்த அடிப்படையில் தலைப்புக்கள் பட்டியலிடப்பட்டது. தொழில் நிமித்தம் கொழும்பு வந்த நாள் தொட்டு சுமார் 10 வருட காலமாக இஸ்லாமிய வீட்டினிலே வாழக் கிடைத்தமையால் அவர்களின் அன்றாட நடைமுறை வழக்கு தெரிந்திருந்தமையினால் தலைப்புகளை வரிசைப் படுத்தும் பணியும் அந்த தள்ளாத வயதிலும் எந்த இடத்திலும் தளை தட்டாமல் எழுதிய புலவர்மணி ஐயாவின் யாப்புச் சுத்தமும் மட்டும் எனக்கு இலகுவாக அமைந்த இரு காரணங்களாகும். 2010ம் ஆண்டில் கண்டெடுக்கப்பட்ட புலவர்மணி ஐயாவின் கையெழுத்துப் பிரதிகளையும் இந்த வெண்பாத் தொகுதியையும் காப்பியக்கோ வாப்பா ஜின்னாஹ் ஷரிபுத்தீன் அவர்களிடம் கையளிக்கும் போது 2012ம் ஆண்டின் இறுதிப்பகுதி வந்து நின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தத் தொகுதியை நான் செய்வதற்குத் தகுதி கிடைக்கக் காரண மானவர்களான யாப்புக் கற்க சொன்ன ஐயா கம்பவாரிதியையும் கற்றுத் தந்த அண்ணா கலாநிதி ஸ்ரீ.பிரசாந்தனையும் வணங்கிக் கொள்கிறேன்.

எனது வெண்பா அறிவு தெளிவு பெற வேண்டும் என்ற நோக்கத்தோடு இதை வழங்கிய வாப்பா காப்பியக்கோ ஜின்னாஹ் ஷரிபுத்தீன் அவர் களையும் உம்மா திருமதி. ஹம்சியா பரீதா ஷரிபுத்தீன் அவர்களையும் நன்றியோடு நினைவு கூறுகிறேன்.

லுணுகலை -ஸ்ரீ
25.01.2014



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மார்க்க மணிச்சுடர் மௌலவி காத்தான்குடி பௌஸ் (ஸர்கி)
அவர்கள் வழங்கிய

# அணிந்துரை

அகிலத்துக்கு வழிகாட்டும் அல்குர்ஆன். அந்த அருள்மறையை ஏந்திவந்த அண்ணல் நபி முஹம்மது (ஸல்) அவர்களின் பொன்னான மொழிகள், அல்குர்ஆனை சீரும் சிறப்புடன் விளங்கி நடக்க மிகவும் துணை புரிகிறது.

அண்ணல் நபியின் மணிமொழிகள் பல்வேறு மொழிகளில் வசனமாக, உரைநடையாக, கவிதைகளாக மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. தமிழ்பேசும் உலகில் பலர் அண்ணல் நபியின் ஹதீஸ் கிரந்தங்களை மொழிப் பெயர்த்துள்ளார். இன்று "ஸிஹாஉஸ் ஸித்தா" என்கின்ற ஆறு ஹதீஸ் கிரந்தங்களும் தமிழுக்கு கொண்டு வரப்பட்டுள்ளன. அந்தவகையில் புனித ஹதீஸ்களை தமிழ் வெண் பாக்களாக ஆக்கிய பெருமை புலவர்மணி அல்ஹாஜ் ஆ.மு.ஷரிபுத்தீன் அவர்களைச் சாருகின்றது.

உங்கள் கரங்களில் தவழுகின்ற இந்த ஹதீஸ்களை உள்ளடக்கிய அருமையான நூலை நான் பார்வையிட்டேன். அந்த ஹதீஸ்களை வாசிக்கும் போது அதனது அரபு வசனங்களும், அதனை உஸ்தாது மார்களிடத்தில் நான் ஓதிய கால கட்டமும் என் முன்னால் வந்து போனது. புலமையின் சிகரம் புலவர்மணி அவர்களின் நூலை, அன்னாரது மகன் டாக்டர் காப்பியக்கோ ஜின்னாஹ் ஷரிபுத்தீன் அவர்கள் என்னிடம் கையளித்து ஹதீஸ்களை சரி பார்க்கத் தந்த போது. நான் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவில்லை காரணம், என்னை இலக்கிய உலகில் மதித்தவர்களில் புலவர்மணி ஆ.மு.ஷரிபுத்தீன் அவர்களும் ஒருவர்.

01.01.1980இல் காத்தான்குடி பாவலர் பண்ணையினால் வெளியிடப் பட்ட "பா"என்ற சஞ்சிகையின் பிரதம ஆசிரியராக நான் இருந்தேன், இந்தப் பத்திரிக்கைக்கு ஆக்கம் தந்த புலவர்மணி அவர்கள் இதன் வெளியீட்டுக்கும் வருகை தந்து உரையாற்றினார். அன்றுமுதல் அன்னாரின் தொடர்பும், பண்பியலும் என்னிடம் காணப்பட்டது. அன்னாரைப் பெரிதும் மதித்தேன். அன்று "பா"பத்திரிகைக்கு அன்னார் தந்த "ஓதினேன் ஆசி உனக்கு" என்ற கவிதையில்....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*உள்ளத் துணர்வை மொழியாது வீரமுடன்*
*விள்ளும் கவிஞர் விளைநிலமாம் - தெள்ளுத்தமிழ்ப்*
*பண்ணையிலே மொட்டவிழ்ந்த பாமலரே யுன்னிதழின்*
*எண்ணரிய வாசம் இனிது.*

*காத்தான்குடிப் பண்ணை கால்கொள்ளும் பாமலரே*
*தாத்தா முதற்பேரர் தாம்விரும்பி - நாத்திருந்த*
*ஓதுவா ருள்ள மொழிசெய்தி தாங்கிநிற்பாய்*
*ஓதினே னாசி யுனக்கு*

இந்த ஆசியை எனக்கு வழங்கிய மாமேதையின் ஹதீஸ் பொன்மொழி நூலுக்கு நான் அணிந்தரை வழங்குவதென்றால் தயக்கத்துடன் சந்தோஷ மில்லாமல் போகுமா? அல்ஹம்துலில்லாஹ். புலவர்மணி ஷரிபுத்தீன் அவர்கள் தனது பா நூலில் 11வது பாடலாக அருமை நபியின் அன்பைப் பற்றி மிக அழகாகப் பாடுகின்றார். இந்நூலின் கருப்பொருளுக்கு இப்பாடல் அத்திவாரமாக அமைகின்றது.

*"தன்னைத்தன் வாரிசைத் தன்தேட்டம் தன்னைவிட*
*என்னை யதிகமாய் நேசிப்போன் - மண்ணுலகில்*
*உண்மை முசுலிமென ஓதினா ரெங்களின்*
*கண்ய நபிகள் பிரான் "*

என்பதாகும் இதேபோல் அல்குர்ஆன் ஓதுவதால் ஏற்படும் அபரீத நன்மைகளைச் சொல்ல முற்பட்ட புலவர் இப்படிக் கூறுகின்றார். தலைப்பு ( திருமறை )

ஓரெழுத்துக் கீரைந்தாய் உண்டுபலன் வான்மறையை
ஊறகற்றி ஓதுபவர்க் கென்றுநபி - பாரிலுள்ளோர்க்
கோதியதால் நேர்படவே யோர்வடுவுஞ் சேராம
லோதி வருக உவந்தது.

இந்தக் கவிதைகளில் இரண்டு வரி கவிதையாகவும், மூன்றாவது வரி உபதேசமாகவும், நான்காவது நபியவர்களின் பல்வேறு ஆளுமைகளைப் பறைசாற்றி நபிகள் நாயகம் சொன்னதாகவும் நயந்து உரைக்கின்றார். அனைத்துக் கவிதைகளிலும் விதமாக அண்ணலாரின் முன்மாதிரிகளை மக்கள் மன்றத்தில் புலவர்மணி முன்வைக்கின்றார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புலமையை இறைவனிடமிருந்து பெற்ற புலவர்மணி தமிழ் மொழியிலே அல்லாஹ் அவருக்கு வழங்கிய ஆற்றலினை நீரோட்டமாக்குவதை "கோள்" என்ற தலைப்பிலான கவிதையில்

*கோள்சொல்லித் தீமூட்டும் கோளன் வருநாளில்*
*சூழ்சுவன வாடை நுகரானே - ஏழ்கடல்சூழ்*
*பூப்பரப்பில் தீனைப் புரியவைத்த பூமானின்*
*நாப்பரப்பில் கண்ட நகல்*

இங்கு பூப்பரப்பிலும், நாப்பரப்பிலும் என்ற வாக்கியங்களால் தமிழுக்கு அவர் இனித்திருக்கின்றார். என்று தோன்றுகிறது. அப்படியென்றால் இனிய நபிக்கு கனிவு மொழியால் ஷரிபுத்தீன் ஹாஜி எப்படி இனித்திருப்பார்கள் என்று கேட்கத் தோன்றுகிறது. இன்னுமொரு கவிதையை நோக்கி ஆக்க இலக்கியத்தின் இனிமை வசனங்களை தனிமையாய் ரசிக்கும் போது...

*நாவினிதா லுள்ளம் நனியினிதாம் உள்ளத்தான்*
*மாவினிதா லீமான் மகிழ்வினிதாம் - யாவினிலும்*
*நாவினிதாய் வைத்திருப்போன் ஈமான் நலமென்றார்*
*நாவினிய நல்லார் நபி*

இந்தப் பாடல்கள் எல்லாம் புலவர்மணி ஷரிபுத்தீனின் புலமையை நமக்கு வெளிக்காட்டி நிற்கின்றன. இந்த நாலில் சொல்லப்பட்டுள்ள அனைத்து ஹதீஸ்களும் "ஸஹீஹு"ல் புஹாரி" "ஸஹீஹ் முஸ்லீம்" "இப்னு மாஜா" "திர்மிதி" "நஸாயி" "அபூதாவூத்" "மிஸ்காத்துல் மஸாபிஹ்" "இஹ்யா உலூமுத்தீன்" போன்ற கிரந்தங்களிருந்து பெறப்பட்டிருப்பதை என்னால் தேட முடிந்தது. முற்றிலுஞ் சமூகத்திற்கு தேவையான தலைப்புக்களில், எளிதில் விளங்கக்கூடிய தமிழில் புலவர்மணி தந்திருப்பது நபிமொழி பரப்பும் பரப்பில் நல்லது செய்து விட்டார் என்பதைப் பறைசாற்றி நிற்கின்றது.

இந்நூல் தமிழ் பேசும் உலகில் பேசப்படும் முதல் நூலாகக் கணிக்கப் படும் என்பது எனது மதிப்பீடாகும். ஹதீஸ் மொழிபெயர்ப்பு தமிழ் கவிதை நூலாகும் என்றும் பாராட்டப்படவேண்டிய நூல் இதுவாகும். இந்த நூலை தேடி எடுத்து கருவுக்கு உருக்கொடுத்த அன்னாரது அருமை மகன் காப்பியக்கோ ஜின்னாஹ் ஷரிபுத்தீன் அவர்களுக்குப் பாராட்டுச் சொல்வதோடு புலவர்மணி ஆ.மு.ஷரிபுத்தீன் அவர்களை அல்லாஹ் பொருந்துவதோடு. மாநபியின் மாபெரும் "ஷபாஅத்"தும் அவருக்கு கிடைக்குமாக ஆமீன்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாயிரம்

## அல் அஸூமத்

மாநிலம் ஈண்டு மனித வாழ்வினைப்
பேணி வாழும் மேனிலை பலப்பல
வகுத்தும் வாழ்ந்தும் வானிலை பெற்றோர்
தொகுப்பிலே இறுதியாய்த் தோன்றிய நபிகளார்
தோற்றிய வாழ்நெறி தூதெனப் படுமோர்
ஆற்றலைப் பெற்ற அருவழி ஆகும்.
அவ்வழி அறிந்தும் அடித்தளம் நுணுகியும்
செவ்வழி அமைத்துச் சிந்தையும் செய்கையும்
சாந்தி, கருணை, சமத்துவம் மிளிர
மாந்தர் அனைவரும் மாண்புற வாழும்
மனிதம் மிக்க மத்திம வாழ்வே
புனிதம் எனநாம் போற்றி வருகிறோம்.
நலமுறை வாழ்வதை நாடி வாழ்ந்த
புலவர் மணியெனும் புன்னகை வேந்தராம்
ஷரிபுத் தீனவர் சகலரும் மீண்டும்
அறிதல் வேண்டி ஆக்கிய பாக்களை
உலகுக் களிப்பதில் உவகை மிக்கோம்.
இலக்கிய வரிசையில் இதனை ஒப்புவோம்.
வெருளூறும் இலக்கணம் மிக்கது வெண்பா.
இருளற வெண்பா இலக்கணம் அதனைப்
போதித் தென்னைப் பொறுப்புளன் ஆக்கிய
மேதகு குருவாய் விளங்கும் புலவரின்
நூலுக் கெனதுரை நுவலுமிவ் வாய்ப்பை
ஞாலப் பேறாய் யானடைந் துளனே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலக்கியம் இதனை வெளிக்கொணர் வதிலே
புலமைத் தந்தையின் புதல்வனாம் ஜின்னாஹ்
தலைமைப் பொறுப்பைத் தாங்கிய மேலவர்.
புலவரின் வெண்பாப் புதையலுள் நுழைந்து
புலமை மணிகளைப் பொறுக்கிக் குவித்துக்
கலையுறக் கோத்துக் காட்சியாய்க் கொணர்ந்தவர்
லுனுகலை ஸ்ரீ;யெனும் உயர்மலைக் கவிஞரே.
புனலெனப் பாடிய புலவரின் மனைபின்
சார்ந்த மாணவர் தாஸிம் அஹமதும்
பேரராம் கவிஞர் பெருமகன் நியாஸூம்
இந்நூல் வரவை எதிர்பார்த் துழைத்த
திண்ணிய ராகத் திகழ்வோர் என்றுமே.
ஜின்னாஹ்ப் புலவரின் திருமிகு துணைவியும்
அன்னோர் பயந்த அரும்பெரும் மக்கள்
நால்வரும் அவர்தம் நல்வழித் துணையரும்
நூலிதன் வருகையை நோற்பெனக் கொண்டனர்.
எலார்க்கும் பொழிகவே இறையருள்!
சலாத்துடன் அஸூமத் சாற்றினன் பாயிரம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காற்றில் செதுக்கிய கருவூலங்கள்

## தூதர் வழித் தூயமொழி

### நூல்

### சலாம்

நீசெல்லும் பாதையிலே நின்குலத்தான் முன்காணின்
நேசமுட னன்னவற்கு நீமுன்னால் - காசில்
இனிய சலாமுரைத்த லோர்"சதக்கா" வாகும்
கனிய மொழிநயினார் காட்டு. 1

முந்திச் சலாமுரைக்க முந்துபவர் தன்னுடைய
சொந்த அகங்காரஞ் சோர்ந்திருப்பார் - வந்தும்
அகங்காரந் தீர்த லழகாகு மென்னும்
முகங்கோணா நாயகர்சொல் நோக்கு. 2

### முஸ்லிம்

செல்வந்தர் சேகரமாய் ஏழை புறக்கணிப்பாய்ச்
சொல்லும் வலிமா விருந்தொன்றே - வல்ல
விருந்துகளி லெல்லாம் மிகமோச மென்றார்
விருந்தோம்பு மேன்மைநயி னார். 3

சீமான் குணத்திற் சிறந்து விளங்குபவர்
ஈமான் நிரம்ப இருப்பவரே - ஆமாம்காண்
நல்ல குணம்படைத்து நாட்டில் விளங்குகவே
வல்ல நபிமணியின் வாக்கு. 4

பெற்றாருக் காகச் செலவிடுவோர் அங்கதுயர்
உற்றார்க் குதவுவா ரொப்படிமை - நற்றிறத்தார்
ஆதரிப்போ ரந்தியநாள் அண்டும் விதனங்கள்
சூதறியா ரென்றா ருவந்து. 5

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்லாஹ்வை விட்டுனை யாண்டு பராக்கூட்டும்
சொல்லும் பொருளேது சொல்வாயோ - நில்லாதே
செல்லும் உலகென்று செப்பினார் நாவதனை
வெல்லும் உரைகண்ட வேந்து. 6

முன்னும் உலோபகுணம் மூடும் இருதயத்துள்
ஒண்ணா தருளீமா னொன்றாக - என்றார்கள்
ஈமா னுலகி லிருக்க முயன்றநபி
கோமா னடியார் குறித்து. 7

ஈமானு மீயா வுலோபமு மொன்றாகச்
சாமா னியமாயோ ருள்ளத்தில் - சேர்மானம்
ஆகா தெனவுரைத்தார் ஆகிறத்தின் செய்திகளை
வாகா யுரைத்த வரன். 8

உம்முன்னோர் நாசம் உழன்றா ருலோபத்தால்
உம்முள்ளந் தீய உலோபத்தைச் - செய்யாது
காக்க எனமொழிந்தார் காருண்ய நாதர்நல்
வாக்கே யிசைக்கும் பரிசு. 9

தன்னைத்தன் வாரிசைத் தன்தேட்டம் தன்னைவிட
என்னை யதிகமாய் நேசிப்போன் - மன்னுலகில்
உண்மை முசிலிமென ஓதினா ரெங்களின்
கண்ய நபிகள் பிரான். 10

அல்லாஹ்வின் அன்பொன்றை ஆசித் திசைகலிமா
சொல்லா லுளத்தாற் துணிந்தவற்கு - அல்லாஹ்வின்
புன்னரகம் புல்ல ஹறாமென்றார் போதனையால்
நன்னபிகள் நாதர் நயந்து. 11

தேவைக் கதிகமாய் வீடெடுத்தல் தீயசெயல்
பாவனை யற்றஃது பாழ்படுமே - தேவையினைத்
தேர்ந்தளவே யாக்குதலே திங்க ளழைத்தநபி
சார்புடையோர்க் கோதிய சால்பு. 12

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொய்பேசா னெண்ணிப் புறங்கூறான் சாபமிடான்
வையு முரையால் வசைபேசான் - துய்யவனே
உண்மை முசிலி மொருவ னெனமொழிந்தார்
கண்ணகல் ஞாலக் குரு. 13

சீவியத்தி லுண்டி சிறக்க நிலவுலகச்
சீவியத்தில் வாழ்நாள் மிகைத்திருக்க - மேவியவர்
பந்தம் மிகவிருக்க வாழ்க வெனமொழிந்தார்
விந்தை யிலாதநெறி வேந்து. 14

முஸ்லிமுக்கு முஸ்லிம் முகம்பார்க்குங் கண்ணாடி
முஸ்லிம்தன் சோர்வுகளை முன்காண - முஸ்லிமவன்
காரணனா யாமென்னக் காசிம் நபியுரைத்தார்
ஆரணத்தி னுண்மை யறி. 15

எல்லா மதமும் தனித்துவம் ஒன்றுடைய
சொல்லாடும் இஸ்லாம் தனித்துவமென் - நல்லவிதத்
தன்மானம் ஒன்றே தனித்துவம் என்றுரைத்தார்
தன்மானம் மிக்க பிரான். 16

கண்முன்னே தோன்றினும் தோன்றாத போழ்தினிலும்
துன்பத்திற் பட்டதன் சோதரனைக் - கண்ணியமாய்க்
காப்பாற்று வானுண்மை முஸ்லிம் எனமொழிந்தார்
காப்பாற்ற எண்ணிநயி னார். 17

யாருடைய நாகரத்தால் மற்றோர்காப் பாவாரோ
பேருடைய முஸ்லிம் அவராவார்- நேருடையான்
நீக்கல் துறந்தார் முஹாஜிர் எனநவின்றார்
ஆக்கம் விளைத்த அரசு. 18

## விதி

என்னதான் சக்தி இயன்றும் இறைவிதியை
விண்ணவர் தானும் விலக்காரே - மின்னிடையாய்
ஒன்றும் படிநடக்கும் ஓராக்கம் தான்விதியே
என்று தெரிந்து தெளி. 19


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருதுவது போலெல்லாம் காரியம் ஆகா
கருதாத தொன்று நடக்கும் - கருதுவது
தானே நடந்துவிடில் கர்த்தன் திருவுள்ளம்
தானே யதுவென் றறி. 20

மண்ணி லிருந்து பிறந்த மனிதனவன்
மண்ணில் மறைந்து விடுகின்றான் - எண்ணுங்கால்
ஈதியற்கை காலம் இசைதருக வென்றுரைத்தார்
மேதினியை மீட்கும் பிரான். 21

உன்செய லாலாவ தொன்றில்லை யுன்கருமம்
தன்னைப் படைத்த இறைவன்பால் - எண்ணிப்
பரஞ்சாட்டல் புத்தித் தனமாகு மென்றார்
உரங்கொண்ட நெஞ்சா ருவந்து. 22

ஏகனையே விட்டுன்னை யேது பிரிக்கிறது
யூக மிருந்தாற் புரிந்திருப்பாய் - ஆகும்
அழகுலகந் தானஃ தறிந்துணர்வா யென்றார்
பழகச் சிறந்த மகான். 23

## திருமறை

ஓரெழுத்துக் கீரைந்தாய் உண்டுபலன் வான்மறையை
ஊறகற்றி ஓதுபவர்க் கென்றுநபி - பாரிலுளோர்க்
கோதியதால் நேர்படவே யோர்வடுவுஞ் சேராம
லோதி வருக உவந்து 24

மார்க்கக் கலைபயிலும் மாணவன் கற்குங்கால்
காக்கு மிறைவனடி சேர்ந்தக்கால் - நோக்கும்
உயர்பதவி யுண்டவனுக் கென்று மொழிந்தார்
சுயமாகப் பேசார் துணிந்து. 25

அல்லாஹ்வின் வேதத்தில் ஆகும்"யா சீன்சூறா"
சொல்லா லொருவிடுத்தம் ஓதுபவர் - நல்லவிதம்
பத்து விடுத்தம் பகர்ந்த பலன்பெறுவார்
சித்தம் தெளிந்தநபி செப்பு. 26

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓதும் குறுஆனில் ஒன்றும் "ஸஜதா"வைச்
சாதனையிற் காணுகின்ற ஷைத்தானும் - பேதலித்தே
ஓலமிட் டோடுவா னென்றார் ஸஜதாவால்
ஞாலம் புகழுநபி னார். 27

கல்லாதார் மார்க்கநெறி கற்று மதன்படியே
நில்லாதா ரிவ்விருவர் நீணிலத்தில் - நல்லபடி
புல்லார் சுவனகதி பொன்று மெனவுரைத்தார்
நல்லார் நபிகள் நமக்கு. 28

நாளுந் திருமறையை நாம்வாழு மில்லத்தில்
சூழவிருந் தோதுவது சோபனமாம் - ஆளிறைவன்
துன்பம் அணுகாது தூரிக்கச் செய்திடுவான்
அன்பினா லாள்வோர் அறை. 29

நாளுந் திருமறையை நல்லபடி யோதுங்கள்
ஆளும் றகுமான் அருள்மொழியே - தோழர்காள்
நல்ல திருமறையை நானிலத்துக் கோதிய
வல்ல இறைதூதர் வாக்கு. 30

அல்லாஹ்வின் வேதத்தை யாராய்வாய்க் கற்றுத்தன்
சொல்லாற் பிறர்க்குரைக்குஞ் சேவகர்கள் - சொல்லாலே
மேம்பட்ட மாந்தரென மேலோன் நபியுரைத்தார்
தாம்பட்ட பாட்டாற் தெரிந்து. 31

சாந்தி படைக்குங் கருமங் களைமிகவும்
ஏந்தி யொழுகும் எழில்நபிசொல் - வாய்ந்தமுறை
கற்றறிந்த வேதநெறி மற்றவர்குங் கற்பிப்பார்
பெற்ற பதவியிலை மேல். 32

அல்லாஹ்வின் வேதத்தை யாராய்வாய் கற்றுணர்ந்து
நல்லாறு காண்பரிந் நானிலத்தில் - புல்லும்
வழிதவற மாட்டார் வருவார்நேர் என்றார்
பழிபாவம் நீக்கும் பிரான். 33

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்லாஹ்வின் வேதமொழி யண்டாத வெற்றுடலாம்
எல்லாமே பாழான இல்லமாம் - சொல்லரிய
வேத வசனம் விளக்கமாய்க் கண்ட இறை
தூதர் முகம்மதுரை துய்த்து. 34

அல்லாஹ்வின் வேதமே யர்த்தமுள வார்த்தையது
நல்லார் நபியின் நடைமுறையே - சொல்லின்
நடைமுறையில் மிக்க நயமுடைத்தா மென்றார்
மடைதிறந்த வேதியரெம் மான். 35

வல்லோன் திருமறையை வாய்விண் டுரைப்பதுவும்
சொல்லைக் குரல்தாழ்த்தி யோதுவதும் - ஒல்லும்
தருமம் வெளியாக அந்தரங்க மாகத்
தருதல்போ லென்றார் பிரான். 36

நாளுங் கலிமா மொழிந்திடுக வஃதுளத்தைச்
சூழுமீ மானைத் துலக்கிடுமே - நாளும்
கலிமா வுளத்தில் கசியும் வலிய
அலிமான் சொன்ன அறிவு. 37
(அலிமான் - அலியாரின் மாமன்)

ஓதுவார் திருமறையை யோதுவிப்பார் மாந்தருள்ளே
வேத நெறிகாணும் மேன்மக்கள் - ஆதலினால்
ஓதுவதை விட்டீங் கொழியாதீர் என்றார்கள்
வேத நெறியோதும் வேந்து. 38

அல்லாஹ்வின் வேதம் அகத்தில் நிலைத்திருக்க
நல்ல படிமனனம் நாட்டிடுக - அல்லாஹ்வின்
ஞாபகமே போற்றுமொரு நல்வினையாம் மென்னுமிறை
ஞாபகமே தீரா நபி. 39

ஓதும் திருமறையை யுள்ளத் திருத்திடுக
வேதந் தவழு மிதயமது - தீதுறையும்
அங்குக் கெடுதி யணுகா தெனமொழிந்தார்
பொங்குமறை யோதும்பூ மான். 40

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலிமாவாம் தவ்ஹீதைத் தன்பாட்டிற் சொல்லும்
வலிமை யொழியுமுன் வாழ்வில் - கலிமாவை
ஆனமட்டுஞ் சொல்லி அமையுங்க ளென்றுரைத்தார்
ஈன மிலாத பிரான். 41

லாஹவ்லப் பொன்மொழியை நாளுமுருச் செய்யுங்கள்
போகச் சுவனப் புதையலது - மாகவழி
போயிறையைச் சந்தித்த புண்ணியர்சொல் கேண்மினோ
தோயிராப் போது தொடர்ந்து. 42

அற்புதமா மிஸ்லாம் அனைத்தும் படைத்தவனின்
நற்கருணை யாகும் நலந்தருமால் - மற்றவற்றின்
வேறாகும் வேதம் விரித்துரைக்கும் வாக்கியங்கள்
ஆறாறும் ஆறாறும் காண். 43

அல்லாஹ்வின் திவ்வியசொல் லாகும் திருமறையை
உல்லும் வகைதினமும் ஓதிடுக - அல்லாஹ்வின்
தூதுநபி சொன்னமொழி துய்யவராம் எங்களுக்கும்
ஓதுநல மூட்டும் உரை. 44

## மூமீன்

தன்னுடைய பண்புகளிற் தாழ்வற் றிருப்பவனே
மன்னு நிறைமூமி னாகுமென - நன்னுதலால்
பன்னு நிறைகுணத்துப் பண்ணவராம் தூயநபி
சொன்ன நெறியைத் தொடர். 45

உண்மை விசுவாசிக் கோர்சிறைக் கூடமாம்
நன்றியற் றோருக்கு நற்சுவனம் - திண்ணமாம்
இவ்வுலக வாழ்க்கை யெனமொழிந்தார் சாந்திமதம்
ஒவ்வும் படியுரைத்தா ரோர்ந்து. 46

பாக்கியவான் நன்மை பயிலுதற்கும் துன்மார்க்கன்
யோக்கியதை யில்லாமல் தூற்றுதற்கும் - நோக்கும்
வகையி லமைந்துள்ளான் மானுடனே யென்றார்
பகையன்பி னால்வென்ற மன். 47


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனுட்டிக்க வேற்ற அருள்விதிகள் கொண்ட
மனுவுயிருக் கீடேற்றம் நல்கும் - துனியாவில்
இஸ்லாம் மதமொன்றே யேற்ற தெனக்கண்டார்
முஸ்லிம் கிளைவளர்த்தோர் முன்பு. 48

அல்லாஹ்வின் ஞாபகம் ஆள்கின்ற இல்லமும்
அல்லாத இல்லமும் ஆகுமே - சொல்லின்
உயிருள்ள இல்லா உடல்கள்போ லென்றார்
வயிரநெஞ் சாளும் பிரான். 49

ஏதும் பொறுப்பை இறைவனிடம் ஒப்படைத்தால்
போது மெனுமாறு புட்கிரணம் - நீதமுடன்
தந்தளித்தல் போலத் தருவா னருளென்றார்
முந்தை நபிகள் பிரான். 50

யோக்கிய தையுள்ள செல்வந் தனைவிடவும்
ஆக்கும் இறைஞ்சும் ஆதுலனே - காக்கும்
இறைநேச னாவா னெனமொழிந்தா ரண்ணல்
கறைதெளியு மாறு கணித்து. 51

கல்விமான் மேன்மக்கள் கண்ணியஞ் செய்வதெலாம்
வல்லோனை யன்னோன் வரநபியை - நல்லவிதம்
கண்ணியஞ் செய்வதனைக் காட்டு மெனமொழிந்தார்
நுண்ணுணர் நாதர் நமக்கு. 52

மூமி னொருவருடன் மூன்றுநாட் தீர்வாக
தாமுரையா தோர்மூமின் தாமதித்தால் - நேமம்
அழகல்ல வென்றுரைத்தார் அன்பின் வடிவாய்
பழகும் பயஹம்பர் பண்பு. 53

வான்மறையை யுள்ளம் மனனஞ்செய் தோதியதன்
தேன்கருவிற் தாழா திருப்பவனும் - கோன்தன்னை
நள்ளிரவில் நின்று தனித்துத் தொழுபவனும்
விள்ளுமேன் மூமினெனும் வேந்து. 54


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாளும் மரணத்தை ஞாபகஞ் செய்பவனும்
மாளுந் தருணம் வருமுன்னே - வாழுங்கால்
தான்தயார் ஆவானும் நல்லறிஞ ரென்றார்கள்
வான்சுடராம் நாயகமா வார். 55

## தொழுகை

செய்யும் முறைபருளில் செப்பும் குறைகாணின்
துய்ய நபில்கொண்டு மூடுவன்காண் - செய்கையிலே
ஆகும் நபில்வணக்கம் ஆற்றும் அதிகமது.
ஏகன் திருத்துாதர் செப்பு. 56

நாளொன்றுக் கைந்துமுறை நன்னீர் நதியினிலே
ஆழக் குளிப்பார்போல் ஐந்துமுறை - நாள்தோறும்
அர்த்தஸ்நா னஞ்செய்தே அல்லாஹ்வை யேத்துவர்க்கு
நிர்த்தோஷ மென்னும் பிரான். 57

அன்பு மிகுக்குமா மாரம்ப நேரத்தில்
மன்னிப் பளிக்கும் மறதியதில் - முன்னோன்
தொழுகை தொடர்வோருக் கென்றார் நபிகள்
தொழுநேர யோகங் குறித்து. 58

எல்லாமே யஞ்சு மிறையவனை யஞ்சுவனை
எல்லாமே யச்சுறுத்து மஞ்சானை - அல்லாஹ்வை
யஞ்சி யொழுகிவரு மண்ணலார் தங்களது
செஞ்சொ லுரையென்று செப்பு. 59

அல்லாஹூ அக்பரெனு மர்த்தமுள வார்த்தையினால்
அல்லாஹ்வை யேத்துமுறை யாக்கியருள் - நல்லவர்சொல்
கண்ணினாற் காணொணான் காண்பா னவனுன்னை
கண்டது போல்நீ வணங்கு. 60

இப்படித்தான் நோன்போ(டு) இசைதொழுகை யென்றிசைத்து
அப்படியே செய்த அகமதர்சொல் - ஒப்பும்
முகமனுக்காய் நோன்புந் தொழுகையு மூட்டத்
தகுமிணை வைப்பதற்குத் தான். 61



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாந்தருக்கோர் மிஃறாஜூம் மானிலத்தி லுண்டிஸ்லாம்
சேர்ந்த முஸிலிம்கள் தேர்வாரோ - வாய்ந்த
தொழுகைதா னம்மிஃறாஜ் தோன்றும் பொழுதிற்
தொழுகையில் கண்குளிர்ந்தார் சொல். 62

அல்லாஹ்வை யஞ்சி யமையா திருப்பவனை
அல்லாஹ்தன் னாக்கங்கட் கஞ்சவைப்பான் - அல்லாஹ்வை
அஞ்சி நபில்தொழுவார் அல்லாஹ்வுக் கல்லாது
அஞ்சா தவர்வா யழுது. 63

அல்லாஹ்வை யஞ்சி யமையு மொருவருக்கே
அல்லாஹ்வின் ஆக்கமெலாம் அஞ்சுமாம் - அல்லாஹ்வை
அஞ்சி யிராத்தொழுகை யாற்றி யயர்ந்தெழும்பும்
வஞ்சமிலா நாயகர்தம் வாக்கு. 64

அல்லாஹ் உரைத்ததனை அண்ணல் நபியுரைத்தார்
சொல்லரும் "திக்றை"ச் செபிக்குங்கால் - நல்லோனின்
பக்க லிருந்து படிதற் றவன்செய்யும்
திக்றை செவியேற்பா னென்று. 65

உள்ளம் புனிதமா யொன்றி யிருப்பதுவும்
விள்ளு மொருவணக்க மென்றார்கள் - உள்ளம்
கசடற வாக்கிக் கணமும் நினைக்கும்
எசமா னுவந்தநபி னார். 66

ஆக்கியளித் தெல்லா மழித்துவிடு மந்தணனை
வாக்கால் மனத்தாற் பயந்தவனை- பூக்கும்
படைப்பினங்க ளெல்லாம் பயங்கொள்ளு மென்றார்
இடைநிலையை ஏற்றார் இசைந்து. 67

வஞ்சி வெறுக்கும் மணவாளன் மஃறூம்கள்
நெஞ்சு வெறுக்கு மிமாமானோர் - அஞ்செவியில்
பாங்கொலியைக் கேட்டும் ஜமாஅத்தைப் பற்றாதோர்
ஆங்கிறைவன் சாபத்திற் காம். 68



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்ந்திருக்கும் நாளில் வரிசை மிகவுள்ள
நாள்"ஜூம்ஆ" என்று நபியுரைத்தார் - சூழ்நிலையைச்
சீர்செய் யுபதேசம் கேட்பதனால் வாரத்தில்
பேர்பெற்ற தென்று பிரிந்து. 69

கூடித் தொழுவதற்குக் கோனிறை பள்ளியென்று
நாடி யெடுத்துள்ள நல்லவற்குக் - கோடாதோன்
சொர்க்கத்தி லில்லமொன்று சொந்தமாய் வைத்திருப்பான்
வர்க்கத்தை வென்றநபி வாக்கு. 70

நாளொன்றுக் கைந்துமுறை நன்னீர் நதியொன்றில்
ஆழக் குளித்தால் அழுக்ககல்போல் - நாளைந்து
நேரந் தொழுவார்புன் பாவந் தொலையுமெனும்
வீர நபியுரையே மேல். 71

தொழுகையென் கண்குளிர்ச்சி கோமான் நபிசொல்
பழுதிலார் நின்று வணங்கல் - தொழுகையினில்
நிற்றல் குனிதல் நிலத்தில் தலைதாழ்த்தல்
பற்றும் பசுமையினைப் பார். 72

ஐந்து கடமைகளில் அல்லாஹ்வைத் தோத்தரித்து
மெய்யாய் வணங்குவது முன்னாகும் - துய்ய
சுவர்க்கத்தின் சாவி தொழுகையென் றாரீர்
புவனத் திரட்சகர்பூ மான். 73

காயிலைகள் காய்வதுபோல் காணுஞ் சிறுபாவம்
தோய்பவனை நீங்குந் தொழுதக்கால் - ஆய
கிளையசைத்துக் காண்பித்தார் கேளறிய நாதர்
மழைக்கரத்தா ரொவ்வ மகிழ்ந்து. 74

அல்லாஹ்வை நாளுந் தொழுவதா லுள்ளத்தில்
நில்லா துளைவன்றி நிம்மதியும் - புல்லுமென
செப்பினா ரெங்களது சேமநலன் வேண்டுநபி
ஒப்பிலா னன்னாரென் றோது. 75

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்லாஹ்வை யில்ல மமர்ந்து தொழுவதிலும்
நல்லாரைக் கூட்டும் "ஜமா"அத்து - சொல்லின்
இருபானோ டைம்மடங் கேற்றமா மென்றார்
வருமா றுணர்ந்துரைக்கும் மன். 76

பள்ளியொன்று வேண்டும் பரமனைத் தோத்தரிக்கத்
தள்ளுந்தக் கொள்கை தவறாகும் - வெள்ளை
மணலிடத்தி லாயினும் நேரம் வரினப்
பணிநிறைந்தாற் போதும் பணி. 77

அல்லாஹ்வின் நேசம் அகநிறைவா யுண்டானால்
நல்லார்நும் போன்றோரை நேசிக்க - நல்லார்தம்
நேசக் கரம்நீட்ட நிர்மலனும் நீட்டுகிறான்
நேசிக்க ஏற்றநபி சொல். 78

சொர்க்கத் திறவுகோல் உங்கள் தொழுகையதாம்
வர்க்கமில் லானை வணங்குங்கள் - பொற்பின்
தொழுகையை விட்டார் துயர்காபி ரென்றார்
வழுவிலா நாயகர்தம் வாக்கு. 79

வான்மறையை யோதுவதும் வல்லவனை நாடோறும்
தான்தாழ் தொழுவதுமித் தாரணியில் - சான்றாகப்
பேரொளியும் பின்னாள் பிரபலமும் பேணுமெனும்
தோரணையில் சொல்நயினார் கூற்று. 80

அல்லாஹ்வை யஞ்சித் தொழுவதுவும் அன்னைபிதா
நல்லாருக் கூழியம் நல்குவதும் - சொல்லரிய
உற்றா ருறவினருக் கொத்தாசை யூட்டுவதும்
பற்று மிசுலாத்தின் பாங்கு 81

## எண்ணம்

எண்ணம் பரிசுத்த மானால் கருமங்கள்
நன்மை சிறந்து நலமடையும் - எண்ணம்
புனித மிலையானாற் பொன்றுங் கருமங்
கனிமொழியார் சொன்ன கருத்து. 82

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனநிறைவே மேலான செல்வமா மஃதோர்
கனகக் குவியலாம் காணீர் - மனநிறைவு
கொண்டதாற் பொற்குவியல் கொள்ள மறுத்துரைத்த
விண்படர் நாதர் விருப்பு. 83

நோக்கா னிறையுங்கள் செல்வம் உருவத்தை
நோக்கு முணருள்ள மொன்றனையே - ஆக்கமிகும்
உள்ளக் கருத்தி னுயர்வைக் கணிக்குங்காண்
விள்ளும் நபிமணிசொல் மெய். 84

சுத்தம் சுகத்திற்கு மூலம் சுகிர்தபரி
சுத்மீ மானது பாதியே - நித்தமும்
ஐந்தர்த்தஸ் நானத்தால் அஞ்சுக வாழ்வென்றார்
முந்தை சுவனத்தின் முத்து. 85

நீண்டநாள் வாழ நினைத்துலகக் காரியமும்
பூண்ட மரணத்தின் பின்புவரும் - நீண்டநாள்
காரியமு மெண்ணல் கடனாகு மென்றுரைத்தார்
வீரியரா மெங்கள் பிரான். 86

நல்லகுண முள்ளவர்க்கு நாளை மகுஷறிலே
வெல்லும் தராசு பழுவேறப் - பொல்லாத
தீய குணத்தவரைத் தேரா னிறையென்றார்
ஆய குணநலத்தா ராய்ந்து. 87

விண்மீனைப் போன்றவர்க ளென்தோழர் அன்னவரின்
நன்னிலையைப் பின்பற்றி னால்நீங்கள் - என்சீர்மை
நேர்வழியைச் சேர்வீர்க ளென்றார் நபிநாதர்
கூர்மதியா லுண்மை குறித்து. 88

பேராசை கூர்த்த இறைநேச மிவ்விரண்டும்
ஓராளி னுள்ளத்தி லொன்றாகச் - சேராதே
என்றுரைத்தா ரெங்க லெழிலார் நபிபெருமான்
நன்றும்மத் தார்க்கு நயந்து. 89

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கல்வி

கற்றறிந்தோர் செய்தீமை காய்விற் கடிதாகும்
கற்றறிந்தோர் செய்நன்மை காணுதிரோ - முற்றும்
சிறப்பா யமையுமெனச் செப்பினார் செம்மல்
உறுத்தாதே கற்றவரை ஓர். 90

கல்விபெற வெட்கப் படுவானும் தான்கற்ற
கல்வியில் மேலெண்ணம் வைப்பானும் - கல்வியைக்
கல்லார்க ளென்றார்கள் காசினியில் யாரிடமும்
கல்லாத நாயகர் காண். 91

நற்பயன் நல்காத கல்வி யொருவருக்குத்
தற்பரன் பேரில் வழங்காத - பொற்குவியல்
போலாகு மென்றார் பொருளைப் பொருளாகக்
கோலாத நாதர் குறித்து. 92

முற்றுங் கொடிய கெடுதி யெதுவென்றால்
கற்றோர் செயுங்கெடுதி தானாகும் - கற்றவர்க்கு
நோவினை யெண்ணாதீ ரென்றார் நொடிப்பொழுதும்
நோவினை யெண்ணா நபி. 93

வேறுபட்ட வர்க்கமன்று கூறகற்றி யொன்றாகச்
சேருமுறை கண்டநபி செப்பியசொல் - பேறொன்றும்
பொற்புறூஉம் நல்லொழுக்கம் போற்றா தவர்நன்கு
கற்றாலுங் கல்வியிலை காண். 94

கல்வியைத் தேடிக் கற்றல் கடனாகும்
கல்வி யுனைத்தேடி வாராதே - கல்வி
மதிப்புக் குரியது மற்றையது போன்று
விதிப்புக் குரிய திலை. 95

ஓதுவிப்போன் கல்விதனை யோதுவோ னஃதன்றி
ஓதுவதைக் கேட்போ னுவந்திருப்போன் - ஈதிவரை
அன்றியைந் தாமவரா யாகாதீ ரென்றுரைத்தார்
நன்றி நவில்நா நபி. 96

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிந்தகலை மற்றவரை அல்லாஹ்வுக் காக
அறியவைத்தல் முன்னர் அறியா - அறிவுகளை
அல்லாஹ் அறியவைப்பா னாக நபியுரைத்தார்
சொல்க பிறர்க்கறிவைச் சூழ்ந்து. 97

கற்ற முறைப்படி காலமெலாம் நேர்புபட
உற்றொழுகு முண்மை யடியானின் - பெற்றோர்
ஒளியால் மிகுந்த உயர்கிரீடம் பூண்டு
எழுவா ரெனுமெம் பிரான். 98

அறிவை வளர்ப்பவனுக் கல்லாஹ் வருளும்
செறிவும் பொருளைச்செய் வானை - நெறியோனும்
கண்ணியஞ் செய்வனெனுங் காலமெலாம் பூதலத்தில்
புண்ணியஞ் செய்தபூ மான். 99

தானறிந்த மட்டிற் றகுமமல்கள் செய்பவர்க்கு
ஈனமிலான் தன்னருளால் இன்னுமின்னும் - வாலறிவைக்
கூட்டி யனந்தரமாய்க் கொள்ளவைப்பா னென்றுரைத்தார்
ஏட்டி னெழுத்தறியா வேந்து. 100

கற்ற அறிவதனாற் கர்த்தன் பணிபுரிந்தால்
உற்ற அறிவை யவன்பெறவே - கர்த்தன்
அருளுவா ரென்றார் அனைத்தறிவு மொன்றாய்
பெருக வுணர்ந்தபெரு மான். 101

கற்பிப் பவனாய்க் கலைநிதமுங் கற்பவனாய்ப்
பொற்புறூஉ மிவ்விருவர்க் கொத்தாசை - அற்புதமாய்
ஆற்றுபவ னாயன்றி யல்லா தவனாகத்
தேற்றாதே யென்னுமிறை தூது. 102

சொல்பவனை யல்லவவன் சொல்லுவதை யேகவனி
சொல்லுநூல் கற்றதையே சொல்லுகிறான் - சொல்லும்
கருத்திற் பிழைகாணாய் காருண்ய நாதர்
விருப்பிற் கிசைந்தபொருள் வேண்டு. 103

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கற்ற அறிவதனை மற்றவர்க்குங் கற்பிப்போர்
முற்றும் ஒளிவிளங்கும் உத்தமராம் - கற்றறியா
அண்ணல் உரைத்த அமுதமொழி யீதாகும்
எண்ணும் அருளே இனிது. 104

கல்வியைத் தேடிக் கருமவழி செல்வோர்க்கு
வல்லான் சுவனவழி வாய்த்திடுமே - நல்லாய்கேள்
கல்விக்கு முன்னிலைமை காட்டும் நபிமணிசொல்
ஒல்லும் வகையில் உணர். 105

பகுத்தறிவெ லாம்நேரா மேலோன் படைப்பில்
பகுத்தறிவை நேராது பாரில் - தொகுத்தறியும்
பாங்கருளப் பட்ட பயகம்பர் சொன்னமொழி
ஈங்குணர்த லென்றும் இனிது. 106

கல்வியைத் தேடியே காதவழி செல்வார்க்கும்
நல்ல சுவனவழி நல்கிடுவான் - வல்லவனும்
என்று மொழிந்தார் எவரிடமும் கல்லாது
மன்று பொலியவைத்த மன். 107

கல்வி யறிவுள்ள நல்லோர்மா நல்லவரே
கல்வி யறிவுள்ள தீயோர்கண் - சொல்லுங்கால்
மாதீய ரென்றார் மதிதலத்தில் கல்விநலம்
ஏதீது கண்டார் எமக்கு 108

கல்விமான் சேர்ந்துகலை கற்றார்க்குச் சோபனமே
புல்லா தவரை வெறுத்தார்க்கு - இல்லையது
என்றுரைத்தா ரிஸ்லாத்தை யெம்மதமாய்த் தந்தநபி
நன்று தெளிக நயந்து. 109

கல்வியைத் தேடிக் கனதூரம் செல்வர்க்கும்
சொல்லரிய சொர்க்கத்தின் பாதையினை - அல்லாஹ்
எளிதாக்கு வானென்றார் ஏகனின் தூதர்
ஒழியாதீர் கற்புநெறி தான். 110

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்றதம் பிள்ளை பெறவளிக்கும் நன்கொடைதான்
பெற்றுயரும் கல்விப் பெருஞ்செல்வம்- மற்றதுபோல்
சன்மானம் வேறொன்று மீங்கில்லை யென்றார்கள்
தன்மானம் கொண்டநபி ஓர்ந்து. 111

கற்றறிந்தோர் நல்லுரைக்குக் காது கொடுத்திடுவீர்
கற்றுணர்ந்த நூலறிவைக் கற்றிலா - மற்றவர்க்கும்
சொல்லி விளக்குமெனச் சொன்னார் நபியிறசூல்
கல்வியின் மாண்பதனைக் கண்டு. 112

கல்விமான் உள்ளத்தால் கண்ணாலும் பார்க்கின்றார்
புல்லர் முகக்கண்ணால் மட்டுமே- கல்வியின்
நோக்கம் கருத்துள்ள தென்றார்கள் வாழ்க்கையின்
ஆக்கம் வகுத்தநபி னார். 113

பகுத்துணர்த்தும் பாங்கில் படைப்பொன் றுலகில்
வகுத்தோன் படைத்தளிக்க வில்லை - பகுத்தறிவு
செல்வத்துட் செல்வம் செகம்போற்றும் நாயகரின்
நல்லுரையைக் கேளீர் நயந்து. 114

## உண்மை

உள்ளதை யுள்ளவா றேயோதல் அஃதுசொர்க்கத்
துள்நுழைய வைக்குஞ் செயலாகும் - ஒள்ளியசொல்
துன்பந் தருமெனினும் உண்மையே பேசென்றார்
நன்மை விரும்பும் நபி. 115

உண்மை யுரைப்பீ ருறுபண்பை மீறாதீர்
அன்பின் அயலாரை ஆதரிப்பீர் - எண்ணுங்கால்
அல்லாஹ்வு மன்னோன் அருநபியும் நேசிப்பர்
வல்லோன் நபிமணியின் வாக்கு. 116

உண்மை யெனும்பெயரி லுண்டோர் சுவனவழி
உண்மை யுரைத்தா ருறும்வழியே- உண்மை
நிதமு முரைக்கட்டு முந்நா வெனமொழிந்தார்
இதமே பயக்குமுரை வேந்து. 117

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மையென் றோர்வாச லுண்டு சுவனத்தில்
உண்மை யுரைத்தவ ருட்புகுத்தும் - நன்வாசல்
உண்மையே யுங்கள்நா உச்சரிக்க வென்றார்கள்
விண்ணுலகு போய்மீண்ட வேந்து. 118

உண்மையே பேசும் உறுதி யுடையவரைத்
திண்ணமாய்த் தீஞ்சுவனந் தேடிவரும் - எண்ணியதை
உண்மையே பேசி யுயர்வடைக வென்றார்கள்
அண்ணல் நபிநாதர் ஆய்ந்து. 119

தேராத வற்றைத் தெரியா தெனக்கூறார்
சாராத கூறியே மாற்றுவார் - தேராது
தேர்ந்தும் தெரியாதென் றேமாற்று வாரன்னோர்
தேர்ந்தோனின் சாபம் உளர். 120

உண்மை யுரைத்தலது நன்மையின் பக்கமாம்
நன்மை வழிநடத்தும் நற்சுவனம் - நண்ணுதற்கே
என்று மொழிந்தார்கள் எப்பொழுதும் உண்மையே
நன்று நவிலும் நபி 121

உண்மை வழிநடத்தும் நன்மையின்பால் அன்னதுவோ
வண்மைச் சுவனத்தின் வாழ்வளிக்கும் - அன்னதனால்
உண்மையைப் பேசி உயர்வடைக என்றார்கள்
அண்ணல் நயினார் அறிந்து. 122

## பொய்

நலங்காக்கும் நாயகரின் நல்லருளை நட்டார்
துலங்க உணரவைக்குந் தூதர் - கலங்கவைக்கும்
புன்னரக வாசலொன்று பொய்யாகும் எச்சரிக்கை
என்பெறினும் பொய்யுரையா தே. 123

பொய்சொல்லல் பாவம் புகலாதீர் மற்றவரைச்
செய்யாமை சொல்லிச் சிரிப்பூட்டல் - பொய்யால்
மகிழ்வூட்டல் கூடப் பெரும்பாவம் என்றார்
திகழ்புகழின் நல்லார் தெரிந்து. 124

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பேச்சு

ஏனுரைத்தோம் இம்மொழியை என்றுள்ளம் காந்தாது
தானுரைக்கு முன்னமே சிந்தித்து - வீணுரையை
விட்டுப் பிறருடனே பேசுங்க ளென்றார்கள்
துட்டரையும் சீர்செய்த வேந்து. 125

பெருக நினைத்துச் சிறுகக் கதைக்க
சிறுக நினைப்பாரின் வாய்ச்சொல் - பெருகும்
நினைப்பதனை யெல்லாம் நிறைப்பார் கதைப்பர்
நினைப்பதற்கு நேரமிலை யே 126

வாழ்பொழுதின் நற்செயலைப் பேசுங்கள் மற்றவரின்
தாழ்செயலைப் பேசாது விட்டிடுங்கள் - தாழ்செயல்
சந்ததியைப் பாதிக்க வேண்டாமே என்றார்கள்
நிந்தைகொளா நாயகனார் தேர்ந்து. 127

மூன்றுபேர் பேசுகையில் மூன்றிலோர் பேர்வளியை
வேண்டிப் பிரித்தே யழைக்காதீர் - தோன்றும்
அவசரத்தா லாயினும் அழகல்ல என்றார்
தவமிஞ்சும் நாயகனார் தான். 128

பல்வேறு காரணத்தாற் தும்மிம் அதன்பின்பு
“அல்ஹம்து லில்லாஹ்” அறைந்திடுக - சொல்லுபொருள்
எல்லாப் புகழும் இறைவன் தனக்காகும்
நல்ல நபிமணிசொல் நாடு. 129

அதிகமாய்ப் பேசேல் அவன்“திக்றை” யல்லால்
அதிகமாய்ப் பேசின் அவனை - அதிகமாய்த்
தூரிப்பீ ரென்றார்கள் தூதரில் ஞானத்தைப்
பாரிக்க வந்தநபி னார். 130

கல்லாகும் நெஞ்சம் கதிப்பாகப் பேசுபவன்
அல்லாஹ்வை விட்டே அதிதொலைவில் - செல்வானை
“திக்றை” மிகச்செய்யும் தீம்சொல் அறிவாளர்
மிக்குறையார் கூறும் விதி. 131

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அளவுக் கதிகமாய்ப் பேசுபவன் பேச்சில்
பிழைகள் மிகவாகும் காணீர்- அளவளாய்க்
கேட்போர் விரும்பக் குறைவாகப் பேசுங்கள்
மாட்சி நபிகள் உரை 132

பாங்கொலியைக் கேட்டு வறிதே படர்ஷைத்தான்
தீங்கிழையா தோடித் திரிகின்றான் - வாங்குமொழி
ஷைத்தானிற் கோட்டம் அடக்கும் எனமொழிந்தார்
ஷைத்தா னணுகா நபி. 133

மலைநகர்ந்த தென்றாலும் நம்பிடுக நம்பேல்
நிலைநிகர்ந்த தென்றா லொருவர் - குலையா
இயல்பதனை நல்வழியி லேற்றிடுக வென்றார்
இயல்பதனை யெண்ணுநயி னார். 134

அன்பினால் மாந்தரை யாதரித்துத் தன்கொள்கை
பின்பற்ற வைத்தநபி பேசுமொழி - உண்மை
விசுவாசி தான்சபியான் மோசமுஞ் செய்யான்
வசைபேசான் சோதரனின் வாய்க்கு. 135

அன்பர் பிரிந்திருந்தால் அன்னவரைச் சேர்த்துவைத்தல்
"சுன்னத் தமல்"களினும் மேலாகும் - ஒன்னாரைத்
தேடியே சொல்காக்கும் செம்மல் நபிநாதர்
வாடிக்கை யோடுரைத்த வாக்கு. 136

காலத்தை வையாதீர் காரணத்தை யூகிப்பீர்
ஞாலத்தைக் காத்துவரும் நாயகனே - சீலம்
பகலை யிரவாக மாற்றினா னென்றார்
தகுமொழியே கூறும் நபி. 137

நன்மையைக் கூறி நயந்திடுக மானிடரின்
தின்மையைக் கூற மறந்திடுக - நன்மையைப்
பேசுவதால் மற்றவரும் பேணுவரே என்பதால்
மாசணுகா நாயகர்சொல் நாடு 138

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒவ்வொரு வல்லபத்தை மாந்தர்க் கிறையளித்தான்
திவ்விய வாய்வலத்தை யுள்ளவனை - செவ்விய
பேச்சாள னென்பரவன் பெற்றிருக்கும் வல்லபத்தைப்
பேச்சில் விருத்தி செயல். 139

## புறம்

மற்றோர் புறங்கூறல் மாகொடிய தெச்சரிக்கை
குற்றவிப சாரத்தின் தாழ்வாகும் - எற்றே
புறங்கூற லென்றும் புகலாதீ ரென்றார்
அறங்காத்த வள்ளல் அறிந்து. 140

மற்றவரின் குற்றங் குறையெடுத்துப் பேசுங்கால்
பொற்பகலும் தன்குற்றம் தன்பாட்டில் - முற்றிழாய்
சீர்தூக்கிப் பார்த்துத் திருந்திடுக என்றார்கள்
யார்குறையும் பேசா நபி 141

புறம்பேசப் பட்டோன் பொறுக்குந் தனையும்
அறங்காக்கு மல்லாஹ் பொறுக்கான் - புறம்பேசல்
பொல்லாத பாவமதைப் பேசாதீ ரென்றார்கள்
நல்லார்க்குள் நல்லார் நபி. 142

## வீண்பேச்சு

அர்த்தமற்ற வீண்பேச்சிங் கார்க்கு முதவாதே
நிர்ப்பயன்செய் யம்மொழியை நீக்கிடுக - நற்பேரும்
திவ்ய விசுலாத்தின் சீரிய பண்பென்றார்
செவ்வையறங் கூறுங் கோ. 143

## கோள்

கோள்சொல்லி மூட்டிக் கலாம்விளைக்கும் கோதாளன்
நாள்மறுமைக் காலம் நரகத்தில் - வாழ்வானே
என்று மொழிந்தார் இணையற்ற நங்கோமான்
ஒன்றும் படிறுரையார் ஓர். 144

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோள்சொல்லித் தீமூட்டும் கோளன் வருநாளில்
சூழ்சுவன வாடை நுகரானே - ஏழ்கடல்சூழ்
பூப்பரப்பில் தீனைப் புரியவைத்த பூமானின்
நாப்பரப்பில் கண்ட நகல் 145

கோள்மூட்டி மக்களிடை கோட்டி விளைவிப்போன்
நாள்மறுமை சொர்க்க நறுமணமும் - சூழ்ந்து
நுகரா னெனமொழிந்தார் நுண்ணறி வாளர்
முகம்மதிற சூல்நயி னார். 146

## நாகாக்க

தீயமொழி பேசுவதின் மௌனம் மிகமேலாம்
மேயவரும் மௌனத்தின் மேலாகும் - தூயதகை
இன்பமொழி பேசல் இனிதாகு மென்றார்கள்
அன்பின் பெருமான் அறிந்து 147

வாக்குறுதி செய்தால் நிறைவேற்றி வையுங்கள்
போக்கரிய துன்பங்கள் நேர்ந்தாலும் - வாக்குறுதி
நம்பிக்கை யூட்டுமனம் ஏமாற்றீர் என்றார்கள்
எம்பிரான் நேர்மை யுணர்ந்து. 148

மற்றவரின் குற்றம் மறந்தும் உரையாதீர்
குற்ற மிழைக்காதா ரில்லையே - மற்றவரின்
பேசும் உரையை மறைந்திருந்து கேளாதீர்
தேசுடைய நாயகனார் தீர்ப்பு. 149

நாவை யடக்கும் பழக்கம் நனிபெரிதே
தேவை யறிந்தடக்கு வார்க்கிறைவன் - சோர்வை
மறைப்பா னெனமொழிந்தார் மன்னவனின் தூதர்
குறிப்பிடும் நாவடக்குங் கோன். 150

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாக்களித்தால் அஃதை நிறைவேற்றி வையுங்கள்
தூர்க்கும் தரம்வந்து தொட்டாலும் - வாக்கதனை
மாற்றாதீர் ஏமாற்றீர் மாண்பாகா தென்றார்கள்
நோற்றாரில் மேலா னவர் 151

இவ்வுலக வாழ்விற் பிறரைப் பரிகசித்தோர்
அவ்வுலக வாழ்வில் அடுத்தவரால் - கவ்வை
பகர்ந்து பரிகசிக்கப் பார்ப்பா ரெனமொழிந்தார்
அகந்தூய்மை கண்டா ரறிந்து. 152

வீணே விவாதம் புரியாதீர் மற்றவர்க்குத்
தானே கொடுத்தவொரு வாக்கதனை - சூனியமாய்
மாற்றாதீ ரென்றார் வகுத்ததனைப் பொன்போலப்
போற்றும் நபிகள் புரிந்து. 153

மீட்சி பெறநினைப்பான் வீட்டில் தனித்திருந்து
ஆட்சி புகல்நா வடக்கிவைத்து - வீட்சிநாள்
செய்த தவறுகளைச் சிந்தைதனில் கண்டழுவான்
துய்ய நபிசொல்லைத் தூண்டு. 154

நாவை யடக்கும் முயற்சி மிகப்பெரிது
நாவை யடக்கு மொருவரது - கூவும்
பலவீனந் தன்னை மறைக்குமிறை யென்றார்
உலகாளும் நாயகனா ரோர்ந்து. 155

நாவினாற் கையினால் மற்றோர் நலிவடைய
நோவினை செய்யா திருப்பானே - பூவிரும்பும்
உண்மை முசிலிமென ஓதினார் ஞாலத்தின்
நன்மை விரும்புநயி னார். 156

உண்மை முசிலிம் ஒருவரை நோவித்தல்
திண்ண மவரைநீ வஞ்சித்தல் - மன்னவனின்
சாபத்திற் காளாக்குஞ் சாதனைக ளென்றுரைத்தார்
கோபத்தை வென்றவெங் கோ. 157


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாக்களித்தா லஃதை மறந்துவிட லாகாது
நீக்கமறு துன்பங்கள் நேர்ந்தாலும் - வாக்கை
மறுத்துவினை செய்தல் கொடுமையா மென்றார்
புறுக்கானின் மூல நபி. 158

நாவை யடக்குந் திறம்படைத்தோர் நஞ்சுகளைத்
தூவிவரும் ஷைத்தானைத் துரத்துவிடும் - பாவவழி
ஷைத்தான் நெருங்காச் சிறப்புற்ற நாயகரின்
மெய்த்தேர்வு கண்ட விதம். 159

உண்மை முசிலிம் உளம்நோகச் செய்பவரும்
திண்ணம் அவரைவஞ் சிப்பவரும் - மன்னவனின்
சாபத்திற் குள்ளாவா ரென்றார் சுபவாழ்வில்
கோபத்தை வேண்டாத கோ. 160

நாத்தூய்தா யாம்வரையில் நம்முள்ளந் தூய்தாகா
பூத்துள்ள மாம்வரையில் ஈமானும் - பூத்தாகா
தென்ற நபிமொழியை யெண்ணியும் நாவதனை
நன்று பழக்க நயந்து. 161

அல்லாஹ்வைக் கொண்டு மறுதிநா ளுண்டென்றும்
நல்ல மனவுறுதி கொண்டவர்கள் - சொல்லதனை
நன்று மொழியவன்றி நாவடக்கிக் கொள்ளட்டும்
என்ற நபிமொழியை ஏற்பு. 162

சொன்னபடி வாக்கை நிறைவேற்ற எண்ணாமல்
சொன்னபடி செய்யத் தவறுவிரேல் - அன்னவனை
ஏமாற்றி விட்டபெருங் குற்றத்திற் காளாவீர்
ஆமாம் நபியுரையை ஆய். 163

அல்லாஹ்வின் திக்றன்றி வீண்வார்த்தை யாடாதீர்
கல்லாகும் நெஞ்சம் கதிப்பானால் - அல்லாஹ்வும்
தூரிப்பான் என்றுரைத்தார் தோகைகதி ஜாபாங்கர்
பூரிப்பீர் திக்றைப் புரிந்து 164

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாவை யடக்கும் திறம்படைத்தோன் ஆண்டுவரும்
சோர்வை மறைப்பான் இறையோனும் - நாவை
அடக்கப் பணித்தார்கள் அண்ணலார் நாவை
அடக்குதலின் நன்மை யறிந்து. 165

நாவினிதா லுள்ளம் நனியினிதாம் உள்ளந்தான்
மாவினிதா லீமான் மகிழ்வினிதாம் - யாவினிலும்
நாவினிதாய் வைத்திருப்போன் ஈமான் நலமென்றார்
நாவினிய நல்லார் நபி 166

## தன்னடக்கம்

கீழ்ப்படியும் பண்பினிய கீர்த்திதரும் தாய்தந்தை
ஆட்சிசெயும் தெய்வம் அரியகுரு - போழ்திற்
பெரியோர் பிறந்தவூர் பேர்காக்கும் சீர்மைக்
குரியாரும் ஆவார் அவர். 167

தன்னடக்க மாய்வாழ்ந்து தான்மரண மானதன்பின்
முன்னுதவி யாம்வினைகள் வைத்திருப்போர் - எண்ணுங்கால்
புத்திமா னென்றார் புகல்வாழ்வில் நல்வினையே
சித்திரமாய்ச் செய்த பிரான். 168

தன்னடக்கம் ஒன்றே சகலவித நற்குணமும்
தன்னடக்க மாகவே தந்துவிடும் - தன்னடக்கம்
மாந்தர்க்கு மங்காத பொக்கிஷமாம் என்றார்கள்
ஏந்தல் நபிகள் பிரான் 169

அல்லாஹ்வுக் காயொருவன் தன்னிலையைத் தாழ்த்துவனேல்
அல்லாஹ் அவனை உயர்த்துவானே - சொல்லரிய
தாழ்வைக் கடைப்பிடித்துத் தாரணியில் மேம்பட்டு
வாழ்ந்த நபிமணியின் வாக்கு. 170

மார்க்கங்கள் தோறும் தனித்தன்மை ஒன்றுண்டு
தீர்க்கமா யிஸ்லாம் தனித்தன்மை - நோக்குங்கால்
தன்னடக்க மென்றுரைத்தார் தாஹா நபியோர்ந்து
முன்டைந்து காட்டும் முறை 171

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்னடக்க மான்ற பயிற்சியாம் மாந்தர்க்குப்
பன்னுமஃ தீமானின் பங்காகும் - என்னே
இறையச்ச முள்ளவர்க்கே இம்மாண்பா மென்றார்
நிறைமனத்தின் நாதர் நினைந்து 172

தந்தையைப் போல்வார் அவர்நண்பர் பெற்றெடுத்த
தந்தையைக் கண்ணியஞ் செய்வதுபோல் - நண்பரையும்
கண்ணியஞ் செய்கவெனும் காருண்ய நாதருரை
எண்ணி யமைக வினிது. 173

## அமானிதம்

கொண்ட அமானத்தைக் குன்றா தளியார்க்கே
உண்டாகு மீமா னுளவாகா - விண்டளித்த
வாக்குறுதி காவார்க்கு மார்க்கமே யில்லைகாண்
ஆக்கம் உரைத்தார் அறம். 174

## அன்பு

பெற்றாரை நேசிக்கக் காணுமவர் பிள்ளைகள்தம்
பெற்றாரை நேசிக்கக் காண்கிறோம் - பெற்றாரை
நேசித்தல் பிள்ளைகள்மேல் நேருங் கடனாகும்
ஆசை நயினார் அமுது. 175

நன்மையை யேவியும் தீமையை நீக்கியும்
அன்பினாற் சுற்றம் அணைத்திருப்பார் - நன்மைசெய்
மாந்தரில் மேலாய் மதிக்கப் படுவரெனச்
சாந்த நபியுரைத்தார் காண். 176

இன்முகமும் புன்சிரிப்பும் யார்க்கும் இதமான
அன்பொழுகும் நல்லுரையும் உள்ளவரை - முன்னோன்
பெரிதும் விரும்புகிறான் பேணுவீர் என்றார்
பெரியோன் இறைவன் நபி 177

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தான்பெற்ற பிள்ளை தனியன் படைப்பிவரில்
தான்நேசங் கொள்ளாதான் தன்னிடத்தில் - தான்தோன்றி
தான்நேசங் கொள்ளான் தவிர்வா னெனமொழிந்தார்
தான்தனியே யுண்ணா நபி 178

மானுடர்பா லன்பு செலுத்தா தவனுக்குத்
தானவனு மன்பு செலுத்தானே - நானிலத்தில்
மக்களுக் கின்பந் தரவல்ல மார்க்கமருள்
மக்கநபி சொல்லிவைத்த வாக்கு. 179

ஏகத் துவக்கொள்கை ஏற்றமுற ஓதியவர்
நாகங் கடந்தோர் நவின்றமொழி - தாகம்
இரக்கம் மிகுந்தாருக் கிம்மையிலும் நன்மை
பரக்க உணவாகும் பார். 180

துன்புறூஉம் முஸ்லிம் சகோதரனைக் கைதூக்கு
அன்பின் விடுதானை யக்கினியை - முன்னோன்
அணுக விடமாட்டா னென்றுரைத்தார் வேதம்
நுணுக உரைத்த பிரான். 181

காரணந்தா னுண்டெனினும் கண்ணியஞ்சேர் முஸ்லிமுடன்
பூரணமா யோர்மூன்று நாளதிகம் - வாரமுறப்
பேசா திருத்தல் பிசகாகு மென்றுரைத்தார்
கூசா தொருமையுரை கோ. 182

தேவையொன்றை முஸ்லிமுக்குத் தீர்த்து மகிழ்வூட்டும்
ஆவலுள்ளோ னென்னையே யாதரித்தான் - தேவையிலான்
தூதர் நபியுரைத்தார் தூண்டும் உபகரிப்பை
மாதவம் என்றே மகிழ். 183

அன்புபா ராட்டுகின்ற பண்புடையான் மீதிரங்கி
அன்புடையா னன்புபா ராட்டுவான் - அன்பை
அணிகலமாய்க் கொண்டிருந்த அண்ணல் உரைத்தார்
அணிகலமாம் உங்களுக்கு அன்பு. 184

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிர்க்கதியாம் ஏழைகளை நேசித்தல் நிர்மலனின்
சொர்க்கத்தின் வாசல் திறப்பென்றார் - வர்த்தகஞ்செய்
தேழையாய் வாழ்ந்தே இலாதாரை நேசித்து
நாளை முடித்த நபி. 185

ஏழைக் கிடலின் இருமடங்கு நன்மைதரும்
தாளும் உறவினர்க்கோ வீர்மடங்கு - கேளிர்க்குத்
தானமும் அன்பளிப்பும் தாமாம் அவையென்றார்
வானவ ரோடுரைந்த மன். 186

அல்லாஹ்வின் ஆக்கமிடை அன்புக் குழந்தையிடை
சொல்லாடும் நேசமது கொள்ளானை - அல்லாஹ்வும்
நேசிக்கா னென்றுரைத்தார் நேசம் மிகவாக
ஆசிக்கும் நாதர் அறிந்து. 187

பெற்றாரைப் பிள்ளைகளைப் பேசும் அயலாரைச்
சுற்றத்தார் சூழ்ந்தோரை நேசிக்கும் - பெற்றியரைத்
தன்நேச ராயல்லாஹ் தாங்குவா னென்றுரைத்தார்
தன்னே ரிலாத பிரான். 188

## பெற்றார்

அல்லாஹ் உவப்பான் அருமைப்பெற் றோருவந்தால்
அல்லாஹ் வெறுப்பா னவர்வெறுத்தால் - சொல்லாரும்
பெற்றார் திருப்பணியைத் தேர்ந்த் திருத்தூதர்
உற்ற கருத்தை உணர். 189

பெற்றார் முகத்தைப் பிரியமொடு பார்ப்பவர்கள்
பெற்றா றொருஹஜ்ஜின் பேறதனை - உற்றாரும்
உம்மத் ஷபாஅத் உதவுங் கருணைநபி
உம்மத் தவர்க்குரைத்த தோர். 190

தந்தை மகற்காற்றும் பேருதவி நல்லொழுக்கம்
சொந்த மெனுமாறு சொல்லுதலாம் - அந்த
ஒழுக்கத்தின் மேலான தொன்றில்லை யென்றார்
விழுப்பத்தை மேற்கொண்ட வேந்து. 191



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இணைவைத்தல் தெய்வத்துக் கிந்நிலத்தி லுன்னைக்
குணமாகப் பெற்றெடுத்தோர் நோவ - அணுவேனும்
செய்தல் பெரும்பாவஞ் சிந்திக்க வென்றார்
வையந் துலக்குநயி னார். 192

தாயோடு தந்தை தனயனை வாவென்றால்
தாயி னழைப்பைமுன் னேற்கவென்றார்
தாயி னரவணைப்பில் முற்றாத் தனயனுன்
தாய்க்கு முதலிடத்தைத் தந்து. 193

அல்லாஹ்வுக் கீடாக யாதொன்றை யாக்குவதும்
நல்லதாய் தந்தைநோச் செய்வதுவும் - சொல்லிவிடும்
பொய்ச்சான்று மாகும் பெரும்பாவ மென்றுரைத்தார்
நச்சாரை நோக்கா நபி. 194

பெற்றார்க்குச் செய்தீமை மட்டுமல் லாதுள்ள
மற்றைய பாவமெல் லாம்விரும்பின் - முற்றும்
பொறுப்பன் எனமொழிந்தார் பூவையர் காப்பு
விருப்பு மிகுந்த பிரான். 195

தாய்தந்தை நோவிப்போன் தாழுஞ்சூ தாடுபவன்
தோய்தருமம் விண்டுகதை சொல்லுபவன் - ஆய்மூவர்
நல்ல சுவனம் தழுவார்க ளென்பதுவே
வல்ல இறைநபியின் வாக்கு. 196

பெற்றார் பிறந்தாரை உற்றார் உறவினரைப்
பற்றி யிருந்து பராமரித்து - நற்றவமாம்
பற்றாதோர் நற்சுவன பாக்கியத்தைப் பற்றாரே
பொற்புறுாஉம் நாயகர்சொல் போற்று. 197

பெற்றாரைப் பேணிப் பணியாத மைந்தரை
முற்றும் கருணைக்கண் நோக்காதே - தற்பரன்தான்
என்று மொழிந்தா ரிருவர்தா மன்பினையும்
ஒன்றப் பெறாவுத் தமர். 198

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தந்தை வெறுத்தால் தனியவனுந் தான்வெறுப்பான்
தந்தை யுவந்தா லவனுவக்கும் - மைந்தனே
தந்தை யுவப்பறியா தாஹா நபியுரைத்தார்
தந்தை வெறுப்பைத் தவிர். 199

பெற்றாரைத் துன்புறுத்தி வேதனைக்குள் ளாக்கிவிடும்
உற்ற ஒருமைந்தன் ஓதலினை - முற்ற
விலகிவிடு மென்றே விளம்பினா ரெங்கள்
அலகிலா நாத ரறிந்து. 200

மக்களைக் கண்ணியஞ் செய்துவரும் தந்தையை
ஹக்கன் சுவனப் பெரும்பதியில் - மிக்க
புகழோடு கண்ணியஞ் செய்கிறா னென்றார்
புகல்கோபந் தீர்ந்த பிரான். 201

பெற்றா ரிருந்துமவர் பேரன்பி லீடேற்றம்
பற்றா மகன்நாச மாகட்டும் - கொற்றவரின்
வேண்டலுக் காமீன் விளம்பினார் தூநெறியைப்
பூண்ட நயினார் புரிந்து. 202

பெற்றோர்க்குக் கீழ்ப்படியா பாவம் மிகக்கொடிது
பெற்றார்க்குக் கீழ்ப்படியாப் பாவமின்றி - மற்றெல்லா
பாவமும் அல்லாஹ் பொறுத்தருள்வா னென்றார்கள்
நாவன்மை மிக்க நபி. 203

பெற்றார்க்குத் தூய பணிவிடைகள் செய்வதுவே
உற்ற புனிதப்போ ருட்கலந்து - பற்றி
உயிர்த்தியாகஞ் செய்வதிலும் உத்தமம் என்றார்
நயினாருள் மேலாம் நபி. 204

## மூத்தோர்

தன்னிலும் மூத்தோர் தரிசனத்தைப் பெற்றிருந்தால்
கண்ணியஞ் செய்தல் கடனாகும் - கண்ணியம்
செய்யாரென் சேகரத்தைச் சேரார் எனமொழிந்தார்
பொய்யா மொழிப்புலமை யார். 205


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டளையை யொப்புவிக்கும் காசிம் நபியுரைத்தார்
ஒட்டிய மூத்தோர்க் குயர்வளித்தோன் - கிட்டிய
மூத்தோனா யாம்பொழுது மூளும் ஒருகூட்டம்
வாய்த்த கவுரவத்திற் கென்று. 206

மூத்தோரைக் கௌரவிக்க முன்னும் இளையவன்தான்
மூத்தோனா யாம்பொழுது தன்னவனைக் - காத்திரமாய்க்
கௌரவிக்க வோர்காளை கர்த்தன் அனுப்புமென்றார்
ஔவியமே பேசா அரசு. 207

தம்மில் வயதில் முதிர்ந்தவரைக் காணுங்கால்
எம்மிற் சிறந்தா ரிவரென்று - சம்மதமாய்க்
கண்ணியஞ் செய்யாரெங் கால்வந்தோ ரல்லரெனப்
புண்ணியர் சொன்னார் புரி. 208

மூத்தோரைத் தாழ்ந்து கனம்பண்ணார் பாலகர்மேல்
பூத்த கருணை மிகக்காட்டார் - வாய்த்த
நலமேவித் தீமை கடியாதோர் எம்மேல்
நலமாகார் என்றார் நபி. 209

## சகோதரத்துவம்

நட்டவர்கள் நல்லவரைச் சந்தித்தல் நன்றாகும்
விட்டுவிட்டுச் சந்தித்தல் வேண்டுமாம் - தொட்டமுறை
அன்பை வளர்க்கு மதனா லெனமொழிந்தார்
மின்னார்க் குரிமைதரும் வேந்து. 210

அல்லாத செய்வாரைக் காணி னவரதனைப்
புல்லாது செய்தல் கடனாகும் - ஒல்லும்
தரமிருந்துஞ் செய்யான் தரமிலா னென்றார்
கரமெழுதா உம்மி நபி. 211

அல்லாஹ்வின் நாமத்தாற் காப்பாற்று மென்றொருவர்
சொல்லின் கணமேனுஞ் சோராமல் - நல்லவிதம்
காப்பாற்றல் மிக்க கடனென்றார் உம்மத்தோர்
தீப்பற்றா மீட்கும் திரு. 212

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போற்றும் இறையச்சம் ஒன்றொழிய முஸ்லிமெலாம்
சாற்றுஞ் சமமென்னச் சாற்றினார்காண் - ஆற்றலுள
என்ன பகுப்பு மிசுலாத்தி லில்லையே
சொன்ன நபிமொழியைத் தேர். 213

ஓரங்க மூறுபட்டா லொன்று முடலமெல்லாம்
சாரும் விதன மதுபோல - பாரதனில்
சோதரர்க் கென்று தொடர்த லெனமொழிந்தார்
மாதவ நாயகச்செம் மல். 214

சோதரனின் தேவைகளை யீடுசெய முற்படுநற்
சோதரனின் தேவைகளை யீடுசெய - நீதமுளோன்
முற்படுவா னென்றே மொழிந்தார் நபிநாதர்
நற்றறத்தால் வாழும் நமக்கு. 215

பேதிநோ யுள்ள பிரிவினுட் செல்லாதீர்
பேதிநோ யுள்ள பிரிவினுள்நீர் - நீதியாய்
வாழ்ந்தால் வெளியே வராதீ ரெனமொழிந்தார்
நீள்சுகத்தைப் பேணும் பிரான் 216

பொறாமையுங் கோபமும் போற்றாப் பகையும்
அறாதுங்க ளன்பார்பாற் கொள்ளீர் - பெறானின்
அடிமைகள்தா மெல்லாரு மாதலினாற் சாந்தி
தொடவேண்டு மென்னுமிறை தூது. 217

காணும் பிணியாளன் கல்பதனைச் சாந்திசெய
வேணும் விரைவிற் குணமாகும் - மாணுடைய
ஆயுள் மிகுக்குமென ஆறுதலைச் செப்புகெனும்
காயுள்ளங் கண்டநபி காண். 218

தோழர்க் குறுபயன்செய் துய்ய மதிகூறி
வாழ வழிகாட்டும் வைபவந்தான் - சூழும்
சிறந்த செயலென்னச் செப்பினா ரெங்கள்
அறந்தலைப் பட்ட அரசு. 219



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பசித்தோருக் கன்னமிடப் பாரநோய் கண்டு
நசித்தோரைச் சந்திக்க நாவால் - விசித்தகைதி
கூண்டகல வைக்க குணநயினார் சொன்னமுறை
வேண்டுங்கைக் கொள்ள விரும்பு. 220

தன்னைவிட்டுஞ் சொந்த இரத்தக் கலப்பாரைத்
துண்டிக்க வைப்பான் துய்யவனின் - வண்டிமிரும்
சோலைச் சுவனம் நுழையா னெனமொழிந்தார்
மேலைக் குருமார் விளக்கு. 221

## அயலார்.

அண்டை யயலார் பசித்திருக்கத் தான்மட்டும்
உண்டு வயிறு புடைத்திருப்போன் - அண்டியவன்
எங்கள் இனத்தானாய் இல்லை யெனமொழிந்தார்
சங்கை நபியமுதந் தந்து. 222

அல்லாஹ்வுக் காகவே நேசித்த லன்றியவ்
வல்லோனுக் காக வெறுத்திருத்தல் - சொல்லிய
இவ்விரண்டும் மேலாஞ் செயலாகு மென்றுரைத்தார்
செவ்விய மார்க்கமருள் வேந்து. 223

அயலாரை யன்புடனே யாதரிக்கு மாறு
செயல்வீரர் அண்ணலார் செப்பும் - மயங்கியே
தாகம் பொறுங்காலை தூரத்துத் தண்ணீருள்
தாகத்தைத் தீராது தான். 224

அண்டை யயலார்கள் அஞ்சும் படியவரைக்
கொண்டவோர் முஸ்லிம் குணநலத்தால் - தன்நாவைக்
காக்கான் சுவனத்துட் கால்கொள்ளா னென்றுரைத்தார்
பேய்க்குங் கிறுங்காத வேந்து. 225

நல்லவன் யாரென்றால் தன்னயலில் வாழ்பவர்க்கு
நல்லவன் யாரோ அவனாகும் - நல்லவன்தான்
அன்புக் கயிற்றை அறுக்கான் எனமொழிந்தார்
அன்பின் சிகர அரசு. 226

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொதிவைக்கில் ஆணத்தைக் கூட்டுங்கள் உங்கள்
பதியின் அயலார் உவப்பச் - சொதியில்
சிறிது கொடுத்தன்பு கூட்டங்கள் எங்கள்
அருமை நபிசொல் அது 227

அந்நியர்தா னுங்க ளயலிடத்தில் வாழ்ந்தாலும்
நந்நிலையி லன்பதனை நாட்டுங்கள் - எண்ணியவர்
தீங்கிழைத்தும் நன்மையே செய்திடுக என்றுரைத்தார்
பாங்கியரி லன்பின் பதி 228

## அனாதை

இல்லங் களிலெல்லா மேற்ற முறுமில்லம்
சொல்லு மனாதை சுகமாக - நல்லபடி
உள்ளதேயோ ரில்லமென ஓது மனாதையின்
உள்ள முணர்ந்த நபி. 229

அண்டு மனாதையை யாதரித்து னென்னுடனி
ரண்டு விரலிணைத் திவ்வாறே - அண்டியெனைச்
சொர்க்கத் திருப்பான் சுதந்திரனே யென்றார்கள்
வர்க்கம் விரும்பாத மன். 230

பாதுகாப் பீந்தே யனாதைகளைப் போஷிக்கும்
தோதுள்ள வீடே துலங்கில்லம் - பாதுகாப்(பு)
ஈயாது துன்புறுத்தும் இல்லம் மிகக்கீழாம்
ஓயா துரைநபிசொல் லோர். 231

நானும் அனாதைகளை நல்லபடி போஷிப்போன்
தானும் சுவனம் தரித்திருப்போம் - ஈனுவிரல்
போன்றென் றிசைத்தார் பொதுவுலக நாயகர்தம்
ஆன்ற கருத்தை யறி. 232

தன்னுணவிற் பானத்திற் றாபரமற் றந்தரிக்கும்
பன்னு மனாதைக்குப் பங்களிக்கும் - மன்னவற்கு
அல்லாஹ் சுவன மளிப்பா னெனமொழிந்தார்
சொல்லால் வசீகரித்த மன். 233

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்காப்பில் வந்துவிட்ட தக்க அனாதைகளைத்
தன்பிள்ளை போலெண்ணித் தாபரிக்க - மன்பிள்ளைக்(கு)
உண்டி யுடைகள் ஒறுக்கா தளித்திடுக
விண்டார் நபிபா டுணர்ந்து 234

## பெண்

நற்புதைய லென்றுண்டிந் நானிலத்தில் நற்குணத்தின்
பொற்புதையல் நன்மனைவி பொன்னென்றார் - சற்குணத்தின்
அற்புதைய லாயிஷாவாம் மம்மைமுதற் பெண்குலத்தின்
நற்புதையல் கண்டநயி னார். 235

புலனுகரும் தோற்றமெலாம் பூதலத்தின் காட்சி
அலங்கார மாம்பெண்ணு மஃதே - துலங்கும்
எனமொழிந்தார் பெண்ணின் பெருமை யதனை
மனுக்குலத்துக் கோதும் மகான். 236

இல்லாள் குணமுள்ளாள் இல்லத் தரசியவள்
நல்லா ரெனின்வீடு நற்சுவனம் - இல்லாள்
குணங்கெட்டா ளாயின் குறுகாது சாந்தி
மணந்தேட்டார் சொன்ன வகை. 237

தக்க முகாந்திரங்கள் தாரா தொருமாது
தொக்கு கணவன் தலாக்கோரின் - ஹக்கன்
சுவர்க்கத்தின் வாடை ஹறாமாகு மென்றார்
சுவர்க்கத்தின் நாயகனார் சூழ்ந்து. 238

வீட்டுடையா னில்லாத வேளையிலே யோர்வீட்டில்
பாட்டுடைய பெண்களிடம் போகாதீர் - நாட்டார்
பலவும் உரைப்பார்கள் பண்பல்ல வென்றார்
நலமே யுரைக்கும் நபி. 239

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இல்வாழ்க்கை

வயதுவந்த பெண்மகவைப் பண்பாய் வளர்த்து
தயவுடைய வாலிபனைத் தேடி - நியதி
மணம்முடித்து வைத்தற்கு வாய்க்கும் சுவனம்
குணநாதர் சொன்ன திது. 240

பெண்ணினது சம்மதத்தைக் கேளா தொருவரற்குப்
பெண்ணை மணமுடித்து வைக்காதீர் - பெண்ணினது
மௌனமே சம்மதத்தின் காட்டாகு மென்றார்கள்
யௌவனத்தின் தன்மையுணர் கோன். 241

குடும்பச் சுமைகருதிக் கொள்ளும் முயற்சி
படும்பாடே யெல்லாம் வணக்கம் - குடும்பநலம்
பேணும் ஒருவர் பெறுவார் இறையன்பு
காணும் நபிசொல் கருத்து. 242

சொற்பச் செலவில் சுருக்கமா யோர்மணத்தைப்
பற்றி முடித்தலை யேபரமன் - முற்றும்
விரும்புகிறா னென்றார் பெரியார் நபிகள்
அரும்பயனா யாவ தறிந்து 243

இல்வாழ்க்கை மானிடனை ஈங்கவ மானத்தைப்
புல்லாது காக்கும் பொருளாகும் - நல்ல
மணவாழ்க்கை காட்டும் மகமூதர் சொன்னார்
குணமாகு மில்வாழ்க்கை யென்று. 244

தன்மனைவி நல்லாள் நனிசிறந்தா ரென்கணவர்
என்னப் படுபவரே மேலாவார்- எண்ணுங்கால்
காதல் மனைவியரைக் கண்ணியமாய்க் கொண்டநபி
போதம் இதுவென்று பேசு 245

செய்யுந் திருமணம்போல் நேசம் வளர்ப்பதற்குப்
பெய்யுங் கருமமொன்று வேறில்லை - வையத்தில்
சாந்தி கருதிச் சகவாழ்வு கண்டநபி
தேர்ந்தே யுரைத்தமொழி தேர் 246

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல்வாழ்வே நான்கொள் இகவாழ்க்கை யம்முறையில்
சொல்லும் வயதும் வாய்ப்புகளும் - உள்ளவர்கள்
இல்லறத்தைக் கொள்ளார் எனைச்சாரார் என்றார்கள்
நல்லறத்தை நாட்டும் நபி. 247

மணஞ்செய்யும் வாய்ப்பும் வயது முடையோன்
மணஞ்செய்தல் பூண்ட கடனாம் - மணமில்
துறவென்ப திஸ்லாத்தி லில்லையே யில்லை
மறவீர் நபிமணியின் வாக்கு 248

மக்கள் அவமானச் சேர்மானங் கொள்ளாது
தக்கவுயர் பாதுகாப் பாக்கிவிடும் - ஒக்க
வயதுவந் தோர்க்குத் திருமணமாம் என்றார்
தயவுடைய நாயகனார் தான். 249

கொண்ட கணவன் அனுமதியைக் கோராது
ஒன்றும் தருமமும் ஈயாளே - பெண்ணாவாள்
சொந்தக் கணவனது சொல்கடவா மாதரசி
தந்தை நபியுரைத்த சொல் 250

வாழ்விழந்த மங்கைக்கு வாழ்வளிக்க ஆதரித்(து)
ஆளிழந்த பிள்ளைக் கமுதளிக்க - நீள்சுவனம்
தேடிவரு மும்மைத் திருநபிகள் வாக்களித்தார்
கூடி யிருந்தார் குறித்து. 251

சுன்னத் வலிமா விருந்தழைப்பை யேற்காதோர்
மன்னான் இறைக்கு மவன்நபிக்கும் - எண்ணுங்கால்
மாறுபட் டாரென்றே மாநபிகள் சொன்னார்கள்
வேறுபடீர் சேர்விர் விருந்து 252

## தொழில்

தனக்களித்த வல்லபத்தால் ஓர்தொழிலைச் செய்வான்
மனங்குளிர ஊதியத்தை வல்லான் - மனந்திருந்தி
ஈவா னொருதொழிலை ஏற்றிடுக என்றார்கள்
கோமான் நபிகள் குறித்து 253


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொழில்மூலம் மக்களுக்குத் தோள்கொடுக்கும் தூய
எழில்சாரும் முஸ்லிம் இறைவனிடம் - அழகு
தருஞ்சங்கைக் காளாவான் தாரணியி லென்றார்
பெரும்பதவி மேவும் பிரான். 254

ஏற்றம் விலைகுறித்து எண்ணைந்து நாளுணவைப்
போற்றி யுறவைக்கும் வர்த்தகன்நேர் - தோற்றானைத்
தூரிக்கு மன்னனும் தூரிப்பா னென்றுரைத்தார்
பாரிக்கும் ஞானநெறி யார். 255

அடிமைகொள் வர்த்தகத்தை அண்டிக்கொண் டிந்தப்
படியினிற் தூர்த்துவிட் டோர் வாய்ச்சொல் - வடுவின்றி
நீதியாய் வர்த்தகத்தை நேராரென் னும்மத்தென்
றோதப் பெறாதா ருணர். 256

வசதி வளர்ப்பம் பலவும் இருந்தும்
நிசமாக யாசகமே செய்வோர் - வசமாகத்
தேடும் பொருளனைத்தும் தீப்பிழம்பா மென்றுரைத்தார்
வேடுவனைத் தீன்புகுத்தும் வேந்து. 257

கச்சவடம் செய்தல் ஹலாலென் றுரைத்தநபி
உச்ச விலைகாத்தே ஊண்பொருளை - நச்சி
மறைத்துவைக்கும் வாணிபனை வல்லோர் விலக்கும்
நிறைகுணத்தார் சொன்ன நெறி. 258

ஹறாமான தேட்டத்தாற் கண்டதீ கையின்
அறவாழ்வின் சொர்க்கம் அணையாதே - மாறாய்
நரகை யடையுமென ஞாலம் புகழும்
உரவோர் நபியுரைத்த தோர். 259

விற்கும் பொருளின் குறைபாட்டைக் கூறாது
விற்பனை செய்யும் வியாபாரி - தற்பரனின்
கோபம் மலக்குகளின் சாபம் உறப்பெறுவான்
கோபம் இலாதநபி கூற்று. 260



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடுபட்டுத் தேடிப் பசிதீர உண்ணுவதே
கூடுடையோர் கொள்கைக் குணமாகும் - பாடுபடா(து)
உண்ண விழைத லிழிவாகு மென்றுரைத்தார்
வண்ண நயினார் வகைந்து. 261

ஐயம் பெறேனென் றறுதியிடு வார்க்கிறைவன்
மெய்யாய்ச் சுவனம் விதித்துள்ளான் - துய்ய
உணவு தொழில்மூல முண்பதுவே யென்றார்
கணமும் இறைமறவார் காண். 262

கூலியாள் நோவு குறைய உதவுபவர்
மேலைநா ளாம்பிரதி மேவுவரே - கூலியாள்
இன்பம் பெறுமள வென்றார்தம் மும்மத்தோர்
துன்பந் துடைக்குநயி னார். 263

தம்மா லியன்றதையே சாதிக்க முற்படுக
தம்மா லியலாத சாதிக்க - சும்மா
ஒருப்பட்டாற் றோல்வி உளவாகு மென்ப
கருப்பட்ட தூதர் கருத்து. 264

## இலஞ்சம்

செய்துதர லஞ்சம் எடுப்போரும் அக்கருமம்
செய்துபெற லஞ்சம் கொடுப்போரும் - வையமருள்
அல்லாஹ்வின் சாபத்திற் காளாவா ரென்றார்கள்
வல்லனின் தூதர் அறிந்து. 265

கைலஞ்சம் வாங்குவோர் கையுதவி யாசித்துக்
கைலஞ்சம் தாரா திருப்பவரும் - மெய்யன்பன்
வல்லனின் சாபத்திற் காளாவா ரென்றுரைத்தார்
அல்லும் உதவும் அரசு. 266

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வணிகம்

பொருட்பெருக்கம் செல்வக் கணிப்பாகா தெய்வ
அருட்பெருக்க முள்ள உளமே - திருவாகும்
செய்ய இடமாகும் சிந்திப்பீ ரென்றார்கள்
துய்ய நபிநாதர் வாக்கு. 267

உள்ளம் விரும்பி உபகரித்தா லன்றியோர்
எள்ளும் பிறர்பொருளை ஏற்காதே - தள்ளிவிடு
தீதாக வந்தபொருள் தீநரகில் சேர்த்துவிடும்
ஆதாரம் நாதர்சொல் ஆய் 268

காசுபணம் சேர்ப்பவர்க்கும் கல்விதனைக் கற்பவர்க்கும்
ஆசை நிறைவே அடைவதில்லை - யோசிப்பின்
நீங்கா நினைவதுதான் நிர்மலனின் நேமமென
ஆங்குரைத்தார் நம்மிறசூல் அன்று 269

பத்தாண்(டு) "இகுதிக்காப்" பள்ளியிற் றங்குவது
மெத்த நொடிந்ததொரு தோழனுக்கு - முற்றும்
உதவுவது மேலென்றார் உத்தமத் தூதர்
நிதமு முதவுமனத் தால் 270

ஏறுவிலை நோக்கி யிசையுணவுத் தானியத்தை
வேறுநிலை வைக்குமோர் வர்த்தகனை - ஈறிலான்
நோய்வறுமை கொண்டுபின் சோதிப்பா னென்றுரைத்தார்
வாய்மைநலங் கண்ட நபி. 271

ஏறு விலைக்காய்ப் பதுக்குபொரு ளெல்லாமே
தேறு தருமந்தான் செய்பொழுதும் - கூறுமதன்
குற்றப் பரிகாரம் கூடா தெனக்குறித்தார்
நற்றவ நாதர் நமக்கு. 272

உள்ளம் விரும்பி உபசரித்தா லன்றியோர்
எள்ளும் பிறர்பொருளை உள்ளாதே- விள்ளுங்கால்
அன்பளிப்பை யன்றி அயலார் பொருள்வேண்டாம்
நன்னபிகள் சொன்னார் நமக்கு. 273


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாழு முலோபகுணம் பற்றாதீ ரும்முன்னோர்
தாழும் படிசெய்த சண்டாளி - வாழும்
உயர்மக்கள் பற்றா ருலோபகுண மென்றார்
அயர்வில்லா நாத ரறிந்து. 274

வட்டிக் கெனக்கொடுத்து வாங்குவது குட்டியுடன்
பெட்டியில் சேர்க்கும் பெருஞ்செல்வம் - ஒட்டி
இறுதியி லொன்று மிலையென் றழியும்
அருள்நபி சொன்ன அறம். 275

மோசடியாற் பெற்ற முதலின் அறத்தினையும்
தேசொலுவி லார்செய் தொழுகையும் - ஈசன்
உவந்தேற்கா னென்றார் உலகோர் நெறியில்
பவவினைகள் நீக்கும் பிரான் 276

சக்காத்து வீதம் கணித்துக் கொடுப்பதனால்
மிக்க கொருள்காப்பு மேவுங்காண் - சக்காத்தின்
மேம்பா டுணர்ந்ததனால் மேதினியோர் கைக்கொள்ள
ஆம்முறையைச் சொன்னார் அறிந்து. 277

உள்ள குறையை உரைக்கா தொருபொருளைக்
கள்ளத் தனமாக விற்றவரை - அல்லாஹ்
சபிக்கிறா னென்றுரைத்தார் சாந்தி நபிகள்
அபிப்பிராய பேதம் அற. 278

ஏறு விலையறிந்தே ஏழை உணவுகளை
வேறு பிரித்துவைக்கும் வாணிபனை - ஈறிலான்
நொந்து சபிப்பான் நுழையாதீர் என்றார்கள்
நொந்து வரவழைத்த வேந்து. 279

அல்லாஹ்வுக் கஞ்சி அறத்தாலும் நீங்காது
சொல்லால் நிசமாகும் வாணிபனே - யல்லாது
மற்றோன் மறுமையில் நீசமுறு மென்றார்கள்
முற்றும் நெறிநில் பிரான். 280

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மோசடிசெய் தற்பெருமை மூடுகடன் இல்லாதே
பாசமிகு துன்யாவை விட்டகன்றோர் - வாசமுள
பொற்சுவன வாழ்விற் புகுவா ரெனப்புகன்றார்
அற்புதங்கள் காட்டு மரசு. 281

ஏழை வரியதனை யீயேனென் பார்பொருளுக்(கு)
ஆளும் இறைகாப் பளியானே - சூழும்
அழிவினுக் கீடுசெயா னென்றார் நயினார்
பழுதின்றி யீக வரி. 282

வர்த்தகத்தை நேர்மையாய்ச் செய்துவரும் வாணிபர்கள்
நித்தனது தூதர் ஷுஹதாக்கள் - பக்தியுடை
சாலிஹின்கள் கூட்டத்தைச் சார்வா ரெனமொழிந்தார்
ஆலிம்கள் முன்னிலையா னோர் 283

உளுவில் தொழுகையதும் மோசடியாற் சேர்த்த
பழுதுபணத் தானமதும் பாழாம்- வழுவிலான்
ஏற்கா னெனமொழிந்தா ரில்லா மெனுந்தூய
மார்க்க முரைத்த மகான். 284

## பேராசைப் பலன்

செல்வந் திரட்டுதற்குச் சேர்ந்தபே ராசையும்
ஒல்லும் வகையா னுயிர்த்துடிப்பும் - நல்லானை
நேர்வழியை விட்டுத் திருப்பிவிடு மென்றார்கள்
பேர்வழியைக் காட்டும் பிரான் 285

உள்ளம் நிறைவுபெறார் ஓதும் மனத்தினரும்
வெள்ளம்போற் செல்வம் இருப்பாரும் - உள்ளத்தின்
ஆசை மிகையதனா லாகு மெனவுரைத்தார்
வீசுபுகழ் நாவார் வியந்து 286

அல்லாஹ் கொடுத்ததே யாஸ்தி யெனவொண்ணார்
சொல்லும் பெருஞ்செல்வம் தூக்குபவோ - பொல்லாத
பேராசை தானே பெரும்பாவக் காலென்றார்
பேராளர் வாழ்த்தும் பிரான். 287

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேராசை பற்றியா னெச்சரிக்கை செய்கிறேன்
பேராசை தீராத் தரித்திரமாம் - பேராசை
கொள்ளாதீர் கொண்டு கவலாதீ ரென்னும்
தள்ளா நபிமொழியைத் தாங்கு. 288

## நலம் நாடல்

முட்டுக்கால் தோன்ற முகம்மேற்குப் பால்திரும்ப
மொட்டைத் தலைதெரியப் போகாதே - கிட்டும்
மலசலத்துக் குட்காரும் மார்க்கமிது சொன்னேன்
நிலவுபடைத் தோனருளி னால். 289

நோய்வினவச் சென்றவர்கள் நோயாள ருக்கிதமாய்
வாய்வழங்கல் அஃதவரை வாட்டுகின்ற - நோயதனை
மாற்றா தெனினும் மகிழ்வூட்டும் என்றார்கள்
ஏற்றம் மிகுத்தா ரினிது. 290

நோயதற் கொவ்வோர் துறைகாண் மருந்துண்டு
நோயகல வாய்த்த மருந்தாக்கி - நோயதனை
ஆக்கினா னல்லாஹ் அறிந்திடுக என்றுரைத்தார்
வாக்கிற் கினியநபி னார். 291

## இக வாழ்வு

நாளாக ஆக நமர்முதுமை எய்திவர
வாளாப் பொருள்விருப்பும் வாழ்விருப்பும் - கேளா
இளமை குலையா திருக்கின்றா ரென்றார்
வளவாழ்வு காட்டும் பிரான் 292

நம்பிக்கை யாளர்க்கிந் நாடு சிறைக்கூடம்
நம்பிக்கை யில்லார்க்கோ சொர்க்கமாம்- நம்புமிறை
சோதனை யென்றே சுமந்திருப்பா ரென்றார்கள்
நாதனை நம்பும் நபி. 293



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வுலக இன்பம் அநித்தியமாய் ஈடுபடல்
ஒவ்வாதென் றந்நியன்போல் ஓர்ந்திடுக - அவ்வுலகம்
நித்தியம் பற்றற்று வாழ்ந்திடுக என்றார்கள்
புத்தி விளங்கும் பிரான். 294

உலகாசை தன்னை யொழித்துவிட்டா லுன்னை
உலகாளு மல்லாஹ் உவப்பான் - சிலவேனும்
மாந்தரிடம் வேண்டாயேல் மாந்த ருனையுவப்பார்
வேந்தர் மொழியை விரும்பு. 295

## பொறுமை காத்தல்

துன்பம் வரின்பொறுமை துக்கத் துயரமுனைப்
பின்னும் அணுகாது பேணிடுக - துன்பமது
உள்ளத்தைத் தாக்கி உபாதைசெயு மென்றார்கள்
வள்ளல் நயினார் மதித்து 296

துன்பங்கள் நேரின் பொறுமை கடைப்பிடித்தல்
ஒன்றும் இறைவணக்கம் ஒக்குமே- மன்பதைகள்
நிம்மதியாய் வாழ்வதற் கேற்ற கருத்தாகும்
நம்மிறசூல் சொன்னர் நலம். 297

உன்செயலா லன்றி உனக்குவரும் துன்பத்தை
நன்மைக்கே யென்று பொறுத்திடுக - துன்பங்கள்
மேலும் தொடராது மேவிடுக என்றார்கள்
ஆல நபிபெருமான் அன்று 298

## உணவு

சொந்த உழைப்பினால் உண்ணும் உணவுதான்
எந்த உணவினிலும் ஏற்றமாம் - சொந்த
மனத்திருப்தி யுண்டாகும் மாற்றில்லை யென்றார்
இனச்சிறப்பை வேண்டும் பிரான். 299



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்டி ஹறாமாயி னுண்டு வளருடலாம்
அண்டும் சுவனத்தை யண்டாதே - ஒண்டொடீஇ
அன்பளிப்பை யல்லால் அருந்தருமம் வேண்டாத
சுந்தரனார் சொன்ன திது. 300

கூடி யிருந்து ஹூதாவின் பெயர்கூறி
தேடும் உணவுண்ணல் வேண்டுமே - கூடி
உணவுண்ணும் வேளை பொலிவாகு மென்றார்
கணநாதர் கொண்ட கருத்து 301

கூடி யுணவுண்டால் கூடும் பறக்கத்தே
நாடிமுன் பிஸ்மி நவின்றிடுக - சோடியிலான்
தன்னை முடிவிற் புகழ்ந்துரைக்க என்றார்கள்
அண்ணல் வருவாய் அறிந்து 302

வயிறு புடைக்க உணவுண்ணேல் உண்டால்
பயிலும் சுகவாழ்வு பாழாம் - துயிலால்
தொழுகை மறப்பாகும் தூய்மொழியார் சொன்ன
வழுவில் சுகநல் வழி. 303

உண்ணல் பருகுதலில் ஒன்றும் நடுத்தரமே
நண்ணல் உடற்கு நலந்தருமால் - பண்ணும்
செலவினத்தைச் சீர்செய் செயலாகு மென்றார்
நலமே மொழிநயி னார். 304

இம்மையினி லுண்டி மிகவாக வுண்பவர்கள்
செம்மும் பசியால் மறுமையினில் - அம்மாவோ
துன்புற் றெழுவார்கள் தோன்றல் நபிமணிகள்
அன்புற் றுரைத்த வழுது. 305

செய்பாவங் காரணமாய்ச் சித்தம் விதித்துள்ள
துய்ய உணவு தடைப்படுமால் - ஐயகோ
பாவந் தவிர்க்கப் "பயஹம்பர்" சொன்னதிது
ஆவல் தருமவல மாம். 306

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்ணக் குடிக்க ஒதுக்கி யிருப்பவற்றை
உண்ணல் குடித்தலிவை மேற்கொண்டால் - பன்னும்
சடலம் சுவர்க்கத்தை சார்வதிலை யென்றார்
விடநோவு தீர்த்திட்ட வேந்து. 307

ஒட்கையைப் போல்நீரை யோர்மூச்சி லல்லாது
விட்டுவிட்டு மூச்சதனை மூன்றுமுறை - உட்கொள்ளல்
நல்ல முறையென்று நாயகனார் செப்பினார்
ஒல்லும் வகையி லுணர். 308

கொண்ட உணவளவை யாரும் குறைப்பதிலை
உண்ணும் அவனே குறைக்கின்றான் - உண்டல்ல
செய்யும் பவவினையாற் சீர்குலையு மென்றுரைத்தார்
துய்ய வழிசொன்ன தூது. 309

காக்கும் ஒருவன் ஹபீபாகத் தேர்ந்தெடுத்த
போக்கற்றோர் வாழ்வுகண்ட பொன்னபிசொல் - வாய்க்குருசி
ஆணத்தைக் கூட்டி யடுப்பெரிக்கக் கொஞ்சமெனும்
வேணு மயலார்க்கு மென்று. 310

உண்ணுங்கள் நீரைப் பருகுங்க ளெப்பொழுதும்
வண்ண வலக்கரமே வாய்ப்பாகும் - எண்ணின்
இடக்கரத்தைப் பாவிக்க வேண்டாமே யென்றார்
இடக்கரை வேண்டாத வேந்து. 311

அரும்பசியின் தேவகளு மாற்றா திருந்தும்
பொறுமையுட னுள்ளார்க் கிறைவன் - ஒருவருடம்
நீருணவு தந்துதவ நிர்ணயிப்பா னென்றார்கள்
சீருணவை யன்றியுண் ணார் 312

உண்ணல் குடித்தலால் உன்வயிறைச் செம்மாதே
மன்னான் வணக்கம் மறப்பாகும் - இன்னும்
கடும்நோய்க்குங் காரணமாம் காருண்ய நாதர்
இடும்செய்தி யேற்பா யினிது. 313

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்டு முடித்ததன்பின் உங்கள் விரல்களையே
நன்றாகச் சூப்பல் நலமாகும் - உண்டி
ஒருமித் தருந்தலினால் உண்டாகும் பாசம்
முறுவலினார் சொன்ன மொழி. 314

உண்ண குடிக்க உதவும் வலக்கரமே
திண்ண மதுவே சிறப்பாகும் - உன்னார்
இடக்கரத்தா லேற்றல் இசையாதே யென்று
நடப்புமுறை சொன்னார் நபி. 315

உண்ணும் உணவுதனில் உண்டோர் உயர்கவளம்
உண்டபின் கைவிரலைச் சூப்பிடுக- அன்ன
கவளம் விரலிடையே தங்கியும் போகும்
தவமேன்மை நாயகர் வாக்கு 316

சூரியனின் வெப்பத்தாற் சூடான நீர்கொண்டு
வீரியன் தேகம் விளக்குவது - சீரிதன்று
வெண்குஷ்டம் உண்டாகி வேதனையா மென்றார்கள்
தன்னிஷ்டங் காண நபி. 317

நீர்குடிக்கும் பாத்திரத்துள் மூச்சுவிடல் சூடுபடர்
நீர்குடிக்க ஊதித் தணித்தலிவை - சீர்குறைந்த
செய்கை யிவற்றைச் செய்யாதீர் என்றுரைத்தார்
வெய்யவினை தீர்க்கும் பிரான் 318

## விருந்து

விருந்தாளி கோணாமல் மேவுகநாள் மூன்று
விருந்தாளி தங்கல் விலக்காம் - ஒருவீட்டில்
துன்பப் படுவார்கள் தூயதன் றேமொழிந்தார்
நன்மையே வேண்டும் நபி. 319

விருந்துக் கழைத்தால் விருப்புடனே செல்க
விருந்தளிப்பா ருள்ளம் மகிழும் - விருந்துக்(கு)
அழையாதா ரில்லம் அணுகாதீர் சொர்க்கம்
நுழைமுதல்வர் சொன்ன மொழி. 320

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விருந்தொன்று தீதென்று வேதநபி விண்டால்
பொருந்து மெளியவரை நீத்து - அருந்தவைக்கும்
செல்வந்தர் தந்திரத்தை தேசம் தெரியவைக்க
நல்கும் வலிமா விருந்து. 321

அல்லாஹ் ஒருவனென்றும் அந்தியநா ளுண்டென்றும்
நல்ல மனவுறுதி கொண்டவர்கள் - இல்லத்தில்
வந்த விருந்தை வரவேற் றுபசரிப்பார்
முந்தை நபிகள் மொழி 322

## அன்பளிப்பு

அண்டை யயலிடத்தார் அன்பளிப்புச் செய்தபொருள்
தண்டி சிறிதா யிருந்திடினும் - கொண்டிடுக
அன்பை வளர்த்துவிடும் ஆபத்திற் கைகொடுக்கும்
நன்றாம் நபிசொல்லை நாடு. 323

அன்பளிப்பு மற்றவரின் அன்பைப் பெருக்கிவிடும்
ஒன்றும் பகையை ஒழித்துவிடும் - அன்பளிப்பை
ஏற்க விரும்பும் எழிலார் நபிபெருமான்
போற்றும் செயலதனைப் போற்று. 324

அன்பளிப்பும் நன்கொடையும் ஆள்வலியாம் சந்தாவும்
இன்முகத்தோ டீந்ததன்பின் எவ்விதமும் - தன்மானம்
பேணும் முறையிற் திருப்பிப் பெறவிரும்பாய்
நாணம் மிகுநபிசொல் நாட்டு 325

அண்டை அயலார் அனுப்புமோர் அன்பளிப்பைக்
கண்டு சிறிதேனும் கைக்கொள்க - அன்பளிப்பை
வேண்டாம் எனமறுக்க வேண்டாம் எனமொழிந்தார்
தூண்டா மணிவிளக்காம் தூது. 326

அன்பளிப்புச் செய்யுங்க ளஃதுளத்தி லூாசாடும்
வன்மம் ஹசதின் வருக்கமெலாம் - இன்மையதாய்ச்
செய்யு மெனவுரைத்தார் சீருலகு கண்டறிந்த
துய்ய நபிநாதர் சூழ்ந்து. 327

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சின்னதுதா னென்றாலும் அண்டையார் தந்ததோர்
அன்பளிப்பை இன்பமா யேற்றிடுக - அன்பளிப்பு
முந்தைக் கறைமூடி மூட்டுமே புத்தன்பு
இந்தழைத்த வேந்தர் இசை. 328

## ஈகை

செய்யுந் தருமத்தாற் தீர்வாகும் ஆபத்தே
எய்தும் நெடுவாழ்வில் பூதலத்தே - வெய்ய
பிணியகலும் ஆதலினாற் பேணுந் தருமம்
அணிநாதர் சொன்ன அறிவு 329

ஈத்தம் பழம்பாதி ஒன்றேனும் வேண்டிவரும்
பாத்திரர்க் கீந்தனுப்பல் வேண்டுங்காண் -நேர்ச்சைக்கும்
இல்லையென்ற சொல்லை இதயங்கொண் டோதாதீர்
அல்லாஹ் உமக்களித்தல் உண்டு 330

அல்லாஹ்வை யண்மும் அருஞ்சுவனம் நேசிக்கும்
சொல்லும் மனிதர்க்குத் தோழனாம் - நல்லதனம்
சீருற் றிருப்பவர்க்குச் சீறும் நரகுமட்டும்
தூரமா மென்னுமிறை தூது. 331

அல்லாஹ்வைத் தூஷிப்பான் ஆழ்நரகம் நேசிக்கும்
சொல்லும் மனிதர்கள் தூஷிப்பர் - நல்லதனம்
சீருற் றிடானுலோபிக் கின்சுவன வாழ்வதனைத்
தூரிக்கு மென்னுமிறை தூது. 332

இட்டபொருள் கூறுவோன் ஈன்றோரை நோவிப்போன்
கெட்ட மதுக்குடித்துக் கேடுற்றோன் - மட்டாரும்
சோலைவன மிம்மூவர் சேரார் எனமொழிந்தார்
மேலை நிகழ்வுரைத்த வேந்து. 333

தன்மரண நாளிற் தரும்நூறு வெள்ளியினும்
உன்னுமுயிர் வாழ்நாள் ஒருவெள்ளி - இன்தருமம்
ஏற்றமா மென்றார்கள் எங்கள் நபிநாதர்
போற்றும் உரையைப் புரிந்து. 334

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல்லாமை யால்வந் திரப்போருக் கேதேனும்
ஒல்லும் வகையி லுதவுங்கள் - இல்லானை
சும்மா வெருட்டாதீ ரென்றார் சுவனத்தில்
நம்மை யணைக்கும் நபி. 335

செய்த தருமத்தைச் செப்பித் திரிகின்றான்
எய்தா னினிய சுவனத்தில் - துய்யவுரை
அன்பளிப்பை யன்றி யயலார்க் களித்துவிடும்
நன்னபிகள் சொன்னார் நமக்கு. 336

பிறர்மெச்ச ஈந்ததனைப் பேசித் திரிவார்
நறவஞ்சேர் நற்சுவனஞ் சேரார் - மறவரையும்
ஈகையினா லுள்ள மிளக்குங் கொடைவள்ளல்
ஓகையறச் சொன்ன திது. 337

எண்ணத்தை முக்கியமா யேற்படுத்தித் தன்னுடைய
சுன்னத்தைச் சோர்வின்றிச் செய்தவர்சொல் - பன்னும்
தலைநிலத்தைச் சார்ந்த தருமம் பிணியும்
தலைவிதியும் மாற்றும் மருந்து. 338

உள்ளம் விரும்பி உபகரித்தா லன்றியோர்
எள்ளும் பிறர்பொருளை ஏற்காதே - உள்ளத்தால்
அன்பளிப் பைமட்டும் ஆதரித்தே நாயகனார்
சொன்னமொழி சிந்தனையிற் கொள். 339

தீர்க்க தரிசிகளின் முத்திரையா மிஸ்லாமென்
மார்க்க மெமக்களித்த மன்னவர்சொல் - யார்க்கும்
மனமுவந் தீந்ததையே யன்றிவே றொன்று
தனதாக்கிக் கொள்ளாமை நன்று. 340

ஈந்ததைச் சொல்லி யிறும்பூது காண்பவனும்
ஈன்றவர் நோக இருப்பவனும் - மாந்தி
மதுவைத் தொடர்வோனும் வான்பதியைச் சேரார்
விதுவழைத்தோர் சொன்ன திது. 341

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்ட கணவன் கொடுத்தால் விடையன்றி
அண்டும் அவனில்லத் தோர்பொருளை - பெண்தனது
சொந்த விருப்பிற் தருமமும் செய்யாளே
இந்தமொழி நாதருரை ஓர். 342

ஈயா வுலோபமும் ஈமானு மொன்றாக
தேயா திதயந் தொடர்பாக - ஈமானின்
உள்ளத் திருந்தே யொதுங்குமீ மானென்றார்
உள்ளத் துயர்ந்த நபி. 343

தன்குடும்பத் தார்க்குந்தன் தாபரிப்பி லுள்ளார்க்கும்
அண்டி யிருப்பவர்க்கு மானபொருள் - கண்டு
செலவிடுவ தெல்லாஞ் சிறப்பாந் தருமம்
நலமாகு மென்றார் நபி. 344

செய்த தருமம் சிறிதளவே யானாலும்
எய்தும் மறுபேர்க் கிசைப்பவர்கள் - துய்ய
சுவனத்தை நண்ணார்கள் சொன்னநபி வாக்கை
கவனத்திற் கொள்க கணித்து. 345

செய்த தருமம் எழுபதின்மேற் பீடைகளை
எய்த விடாம லெதிர்க்குங்காண் - கைநிறைந்த
நன்கொடையை யெல்லாந் தருமமாய் நல்குநபி
அன்புடையார்க் கூட்டு மமுது 346

நட்ட பயிர்விளைவை நாடிவரும் புள்ளினங்கள்
துட்ட மிருகங்கள் துய்த்தவெலாம் - நட்டவர்செய்
தான மெனப்படுமால் தாரா திழப்பென்றார்
மோனங் கதித்த பிரான். 347

அல்லாஹ்வுஞ் சொர்க்கமும் அன்புடைய மாந்தரும்
எல்லாம் அருகாகு மீபவர்க்கு - பொல்லாத
தீநரகு மட்டும் வெகுதொலைவி லாமென்றார்
வானுலகும் போற்றுநபி னார். 348

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாசகங் கேட்போர் அசுவமேல் வந்தாலும்
வாசகம் பேசேல் வழங்கிடுக - யாசகன்
யாசிப்ப தொன்றே பொருளாகு மென்றுரைத்தார்
ஆசிப் பறியா அரசு. 349

தருமம் விரும்பித் தருவதனாற் செல்வம்
ஒருநாளுங் குன்றா துறுமே - பெரிதும்
அறுதியிட்டுக் கூறுகிறே னன்பினோ டேழை
பெறவருள்க வென்றார் பிரான். 350

அல்லாஹ்வின் பேர்கூறி யாசிப்பார்க் கேதேனும்
இல்லையென்னா தீதல் இசைவாகும் - நல்ல
விதிவிலக் கொன்றில்லை வேண்டுவோர்க் கீதல்
மதிமிக்க நாயகரின் வாக்கு. 351

துன்பத்தி னின்றுன்னைத் தூரிக்க வைத்துவிடும்
இன்பத்தி னீகைக்கு முந்துறுக - தன்மொத்த
அன்பளிப்பை யெல்லாமே யாதுலருக் கீந்தநபி
தன்விதிப்பை யெண்ணித் துணி. 352

மக்களுக்கு நன்மைகளை மாண்புடனே யேவுதலும்
விக்கினத்தின் தீமை விலக்குதலும் - தக்க
தருமமா மென்றுரைத்தார் தாஹா நபிகள்
அருமையை நன்கு அறிந்து. 353

சக்காத்து வீதம் கணித்துக் கொடுப்பதனால்
மிக்க பொருள்காப்பு மேவுங்காண் - சக்காத்தின்
மேம்பா டுணர்ந்ததனால் மேதினியோர் கைக்கொள்ள
ஆம்முறையைச் சொன்னா ரறிந்து. 354

இல்லாமை யால்வாடி ஈயென்னு மேழைக்கு
சொல்லாதே யீந்திடுக சொற்பமெனும் - இல்லாயின்
ஈத்தம் பழம்பாதி யென்றாலு மென்றதுவே
வாய்த்த திருமுறையின் வாய். 355

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இகமதிலே யோர்முஸ்லிம் ஏற்ற தருமம்
மகுஷரிலே தாழ்நிழலாய் வந்து - வெகுகனலை
மாற்றும் எனமொழிந்தார் மன்பதைகட் கீடேற்ற
மாற்றம் உரைக்கும் மகான். 356

தருமம் கொடுக்குங்கை மேலாகும் கீழாகும்
தருமம் எடுக்குங்கை தானே - தருமம்
கொடுத்தவர் மேலோர் கொடுங்களேன் என்றார்
கொடுத்துக் களித்தவெங் கோ. 357

இல்லையென்று கூறிக்கை யேந்தும் எளியவர்க்கு
இல்லையென் னாதுபழப் பாதியெனும் - நல்லபடி
ஈந்தனுப்ப வேண்டும் இகழாதீ ரென்றார்கள்
சாந்தி நபிமணிகள் தேர்ந்து 358

அந்திம நேரத்தில் ஆயிரம் காசினிலும்
முந்திய காலத்தில் ஓர்காசும் - வந்தவர்க்கு
ஈதல் சிறந்தவறம் ஈந்து கரஞ்சிவந்த
தூதர் அமுத மொழி 359

தண்ணீர் நெருப்பை அவித்து விடுவதுபோல்
நன்னீர்மை யாற்செய் தருமங்கள்- புன்னீர
பாவம் தொலைக்குமெனப் பாரின் அருளார்
நாவல்லார் சொன்னார் நயந்து. 360

## பெருமை

நண்பர்கள் தம்முள்ளே தன்னை யுயர்வாக
எண்ணி நடப்பவனை யேகனும் - திண்ணம்
அறவெறுப்பா னென்றார்கள் அன்பர் விருந்தில்
விறகொடிக்க எண்ணிய வேந்து. 361

பெருமித முள்ளத்திற் கொள்ளல் தவறாகும்
துரும்பத் துணைகொண்ட தோஷம் - பெருகிப்
பெருநர குய்க்குமாம் பேணுவீ ரென்றார்
பெருமித மூராத வேந்து 362

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்னியர் மெச்சவென ஆடம் பரமாக
வண்ண உடையுடுத்து வார்தம்மை - முன்னோன்
விரும்பா னெனமொழிந்தார் வேந்தார்க்கு வேந்தர்
அருமறையைத் தாபித்த போது. 363

## துன்பத்தில் உதவுதல்

துன்பம் வந்துற்ற சோர்விலா தோர்வினையை
தன்முயற்சி யாற்செய்து வாழ்வார்க்கு - அந்தமிலான்
தன்னருளைத் தந்து பலிதம்செய் வானென்றார்
சொன்னபடி செய்த பிரான். 364

## சீர்மை

கர்வத்தால் பூமிதொடக் கட்டுடையில் மேவுபவர்
மர்மத்தா னன்மை மருவாரே - நிர்மலத்தான்
முற்றும் உவக்கும் முகம்மதெனும் நம்நயினார்
பற்றும் வழியதனைப் பார். 366

ஆணுடையைப் பெண்ணும்பெண் ஆசிக்கும் சீருடையை
ஆணும் விரும்பி அணியவொணா - பூணுவரை
அல்லாஹ் சபிப்பான் அணியாதீ ரென்றார்கள்
சொல்லா லுயர்ந்தபெரு மான். 367

காலணியுந் தோலணியைக் காலில் வலமிருந்தும்
சீலமுடன் காலைக் கழற்றுவது - காலின்
இடமிருந்தும் ஆரம்பம் செய்திடுக வென்றார்
தொடர்வழமை காட்டிவைத்த தூது. 368

வெடிச்சிரிப்பே வேண்டாம் வதனத் தெளிவைக்
கடியுணர்வை மாற்றும் கவனம் - வெடிச்சிரிப்பை
எச்சரிக்கும் மெங்கள் எழில்வதன நாயகரின்
வச்சிரம் போன்றதோர் வாக்கு. 369

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீயபொருள் காணாது கண்ணையும் பாவஞ்சார்
தீயசொற் கேளாது காதையும் - தூயனவாய்க்
காப்பாற்று மென்றார்கள் காருண்ய தீஞ்சொல்லை
நாப்பற்றும் நாதர் நபி. 370

உலக வழமை உயர்தீனின் கோளை
விலகா திருப்பின்பின் பற்றல் - பலநாள்
முதியோர்பின் பற்றியதால் மோசம் வராதே
பதிநாதர் சொன்ன திது. 371

நம்பிக்கை யாளர் நரையை விலக்காரே
நம்பிக்கை யின்னொளி யஃதாகும்- நம்பிக்கை
நாளின் முதுமை கணிக்குங் குறியென்றார்
கோளிற் குலையாத கோன் 372

சக்திக்குட் பட்டதையே தானோன் விரும்புகிறான்
சக்திக்கு மேலில்லை யாதலினால் - பக்தியுளோர்
தன்னா லியன்றதையே செய்யட்டு மென்றுநபி
முன்னா ளுரைத்ததனை யோர். 373

பிள்ளை பிறந்தால் வலக்காதில் பாங்கொலியும்
சொல்லும் இடதில் இகாமத்தும் - சொல்லுவதால்
ஷைத்தானின் தீங்கொன்றும் செல்லா தெனமொழியும்
வைத்தபெரும் பாசத்தின் வாய். 374

நல்லா ருடன்கலந்து தான்கருமஞ் செய்வோனும்
சொல்லும் குடும்பச் செலவினத்தை - நல்லாய்
நடுநிலையிற் கொள்வோனும் நாளும் வறுமை
தொடுவதிலை யென்றுரைத்தார் தூது. 375

கிரகணத்தால் யாருக்கும் தீங்கில்லை யஃது
வரன்முறையா லேற்படும் பாங்கு - கிரகணத்தைக்
கண்டாற் பணிந்திறையைக் கண்ணியஞ் செய்கவென
விண்டார் மகிதலத்தின் வேந்து. 376

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீண்ட சிகையைத் தரித்தல் நிலந்தொடவே
பூண்ட வுடுமானம் மேலுயர - காண்ட
கணுக்கால் தெளிவடையக் கட்டுதலும் வேண்டும்
மனதாற் தெளிவடைந்தார் வாக்கு. 377

பட்டுடுத்தல் தங்கப் பணிபூணல் ஆண்முஸ்லிம்
விட்டுவிடல் வெள்ளிதங்கப் பாத்திரங்கள் - தொட்டவுண்டி
உண்ணல் குடித்தல் உதவா தெனமொழிந்தார்
விண்ணவ ரோடுரைத்த வேந்து. 378

வீதியிலே கண்டெடுத்த வேற்றார் பொருளதனை
நாதியற்ற தென்று தனதாக்கி - ஆதியரைத்
தேடி வழங்காதோர் உண்மை தவறியவர்
ஏடறியா ஏந்தல் இசை. 379

மூத்த நரைமயிர்கள் முஸ்லிம் தனக்கொளியாம்
சீய்த்துப் பிடுங்கல் சிறப்பன்றே - பாத்திரன்தான்
மூப்பின் மகிமை உணர்த்தும் அடையாளம்
வாய்த்த நாயகனார் வாக்கு. 380

அல்லாஹ்வை யஞ்சி யழுதகண் ணீர்த்துளியும்
லில்லாஹ்வுக் காம்போரில் நீணிலத்தில்- துள்ளும்
உதிரத் துளியும் உயர்சுவனஞ் சேர்க்கும்
பதியிற் சிறந்தமகான் வாக்கு 381

மக்களுக்கு நித்தம் பயனளிக்க மார்க்கங்கள்
ஹக்கனுக் காயிங் கியற்றுபவர் - அக்கருமம்
உள்ளத் தனையும் நலனடைவா ரென்றார்கள்
வள்ளலிற சூல்நபிகள் கோன். 382

எண்ணியது நல்ல தியற்றப் படாவிடினும்
புண்ணிய முண்டு பொருந்திலையை- எண்ணினும்
பாவமொன் றுண்டு பகுத்தறிவீ ரென்றார்கள்
நாவன்மை பெற்றநயி னார் 383

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நன்மை புரிவதற்கு நன்னெறியைக் காட்டுபவர்
நன்மை புரிந்தவரைப் போலாவார் - நன்மை
புரியாமல் நல்லருளை ஏற்கின்றார் என்றார்
அரியவுரை கூறும் நபி 384

நிம்மதியாய் வைகறையில் நித்திரையில் நீங்குபவன்
இம்மைச் சுகமெல்லாம் தன்னதுவாய் - சும்மாவே
பெற்றானைப் போலாவான் என்றார் பெருமானார்
அற்புதமாம் நிம்மதியை யாய்ந்து 385

இருமுஸ்லிம் சந்திப்பில் இன்பசலாம் கூறிக்
கரலாகு செய்ய வவர்மேல் - பரமன்
றகுமத் திறங்குமென நாதர் மொழிந்தார்
பகுமறிவு மிக்கோர் பரிந்து. 386

சொற்ப உணவில் திருப்தி யடைந்தவர்செய்
சொற்ப அமலல் திருப்தியுறும் - தற்பரனும்
போதுமெனும் எண்ணம் பொருந்திடுக என்றார்கள்
போதனையைச் செய்திருக்கும் கோன் 387

தீய செயல்களிலே கீழ்ப்படியான் ஓர்முஸ்லிம்
தூய செயல்களிலே யல்லாதே - தூய
செயல்களிலே தன்னடக்கம் காண்பான்என் றார்கள்
தயவை யணிகொண்ட வேந்து. 388

நெஞ்சை உறுத்தும் பிரச்சினையை விட்டொழித்தே
எஞ்சி யிருத்தல் நலமாகும் - நெஞ்சை
உறுத்தியுன் சிந்தனையைக் கூழாக்கு மென்றார்
பொறுத்திருக்கும் பூமான் நபி. 389

அல்லாஹ் நமக்களித்த ஆள்பொருள் போதுமெனும்
நல்லாறு கூட்டும் மனமொன்றே - சொல்லாகும்
தீராத செல்வம் தெரியாப் பெரும்புதையல்
சீரார் நபிசொல் நமக்கு 390

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேசும் பொலிவுமுள திவ்ய முகத்தினரை
வீசு புகழிறைவன் வேண்டுகிறான்- தோசம்
கலந்த முகத்தினரை கர்த்தன் கறுப்பான்
நலஞ்சேர் நபியுரையென் றோது 391

யார்க்குமே சந்தேகம் வேண்டாம் அதுகுழப்பஞ்
சேர்க்குமோர் அச்சாணி யாகுமே - தீர்க்கமாய்
நேராத ஒன்றைநம் பாதீரே என்றார்கள்
சீராளர் நாதர் நபி. 392

கொள்ளை பறக்கத்தைக் கோரும் ஒருசதக்கா
உள்ளும்நல் நோன்பு உடல்சதக்கா - பிள்ளாய்
சதக்கா வகையுரைத்த சாந்திநபி சொன்னார்
எதற்குமுன் டாம்சதக் கா 393

நன்மையின் தட்டைக் கனமாக்கும் மீசானின்
எண்ணும் ஒருவனின் நற்குணம்தான் - எண்ணுங்கால்
நற்குணத்தின் தாயகமாம் நாதர் மொழிந்தார்கள்
அற்புதமே யில்லை அறி. 394

## நல்வழி

செய்துவிட்ட நன்மைகளைச் செப்பித் திரிபவர்கள்
எய்தவரும் தெய்வநலம் எய்தாரே - செய்தும்
பயன்பெறார் பாடு பரிதாபம் என்றார்
தயவுள்ள தோழர் நமக்கு 395

மக்கள் பிரச்சினைகள் வாது வளராமல்
ஒக்க உடன்பாட்டை உண்டாக்கல் - தக்க
தருமமா மென்றார் தருமம் தழைக்கும்
கருமமே கண்ணாயி னார் 396

நற்குணமும் நாதன் பயமும் அவன்தனது
பொற்சுவனம் போக்குமிரு சாதனங்கள் - அற்புதமோ
நற்குணத்தார் நாதர் நபிபெருமான் உம்மத்தோர்க்(கு)
அற்புதமாய்ச் சொன்ன தறி. 397


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்சொல்லைக் கேட்டதனை யேற்று நடந்தவர்கள்
மன்னா னுரையதற்குக் கீழ்ப்படிந்தார் - என்னளவில்
மன்னா னுரையையே மாந்தர்க்குக் கூறுவதால்
என்ற நபிமொழியை ஏற்பு 398

நீதி நிலைக்கும் அநீதியை நீக்கிடுக
பீதி தருமாம் பெருநாளில் - சேதி
அணைக்கும் இருளை அநியாய மென்றார்
பிணைக்குப் பிணைநின்ற வேந்து. 399

நன்மறையு மென்னுரையும் நான்விட்டுச் செல்கின்றேன்
இன்னுரைகள் கேட்டு நடப்பீரேல் - என்சார்
வழிதவற மாட்டீர்க ளென்றார் நபிகள்
மொழியதனை தேர்வீ ருவந்து. 400

கற்றாரின் கல்வி கருந்தனத்தா ரீகையுடன்
உற்ற வதிகாரி யூர்காவல் - மற்றுள்ள
ஏழை பிரார்த்தனையு மிந்நான் கடிப்படையில்
வாழுல கென்னும் பிரான். 401

என்மேற் ஸலவாத் தியம்புங்க ளஃதுங்கள்
துன்பந் துடைக்குந் துயர்களையும் - நன்மொழியாம்
வில்லங்கந் தீர்க்கும் விசகளமா மென்றுரைத்தார்
நல்லியல்பு கண்ட நபி. 402

என்னைப்பின் பற்றியவ ரென்றும் வழிசறுகார்
துன்னுமாத் துர்லபம் தானடையார்- என்பதுவே
மன்னவனின் சொற்படியே வாழ்ந்தெமக்கு மாதிரியாய்
முன்னடைந்த தூதர் மொழி. 403

நற்றவத்தின் நாயகனார் நாமங்கேட் டோர்சாந்தி
சொற்புகலார் நாச மடையட்டும் - கொற்றவரின்
வேண்டலுக் காமீன் விளம்பினார் தூநெறியைப்
பூண்ட நயினார் புரிந்து. 404

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வள்ளல் நபிவழியில் வாழ்ந்தோர் முசிலிம்கள்
தெள்ளு மொழிநபிசொல் செய்தியிது - கள்ளமிலா
என்வழியை விட்டவர்கள் என்னையே சாராதார்
என்ற மணிமொழியை எண். 405

என்கபுறைக் காண்போர்கள் என்னையே வாழ்நாளில்
கண்முன்னே சந்தித்தல் போலென்றார் - சொன்னவிதம்
ஹஜ்ஜைமுடித் தானென்னைச் சந்திக்க வென்றார்கள்
அச்ச மகன்றநயி னார். 406

எல்லாரும் மேய்ப்பாளர் ஈங்கு தமைச்சார்ந்த
எல்லார் செயல்குறித்து மந்நாளில் - வல்லான்முன்
மேய்ப்பாரைக் கேட்பான் விரிவா யெனமொழிந்தார்
மேய்ப்பாராய் வந்தமைந்த வேந்து. 407

மூன்று தினங்களின்மேல் முஸ்லிம் ஒருவருடன்
தோன்றும் வெறுப்பைத் தொடராதீர் - ஊன்றும்
வெறுப்போ டிறந்தவர்கள் ஏறார் சுவனம்
கறுத்தாரை வென்றநபி கூற்று 408

பசித்தோருக் கன்னமிடல் பாரநோய் கண்டு
நசித்தோரைச் சந்திக்க நாவால் - விசித்தகைதி
கூண்டகல வைக்கக் குணநயினார் சொன்னமுறை
வேண்டும்கைக் கொள்ள விரும்பு. 409

கல்லா தவரும்தான் கற்றபடி வாழ்வினிலே
நில்லா தவரும் நெறிசாரார் - வல்ல
இறைதூதர் சொன்னார் இயல்பஃது மீது
நெறிசாரும் மார்க்கம் தெளி. 410

உங்கள் உளநிறைவை மற்றவர்பால் பார்ப்பதுபோல்
உங்களிடம் மற்றவரும் பார்ப்பாரே- உங்கள்
செயலதனில் செம்மை நிலவட்டும் என்றார்
அயலாரை நோவிக்கா தார் 411


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*அனுமதி தாராமுன் னன்னியரி னில்லம்*
*அணுகுதல் சீரிதன்றுன் னன்னை - மனமார*
*வாழில்ல மானாலும் வாவென்ன வேண்டுமே*
*தோழர் தொடர்நபியின் சொல்* **412**

*உள்ளொன் றிருக்கப் புறமொன்று தைரியமாய்*
*விள்ளுநய வஞ்சகரைச் சேராதீர் - நல்ல*
*ஒழுக்கத்தில் மேம்பட்ட உத்தமரைச் சேர்வீர்*
*விழுப்பத்து நாதர் விருப்பு* **413**

*வலக்காலை முன்னிடுக வாங்கும் இடக்கால்*
*நிலக்கா லணியின் நெறியே- விலக்காதீர்*
*பாதவணி புல்லர்க்குச் சாந்திபக ரேலென்றார்*
*மாதவத்தை முன்னும் மகான்* **414**

*நற்கிரியை கொஞ்சமெனும் நாளும் நிரந்தரமாய்ப்*
*பொற்புறவே செய்துவரல் வேண்டுமாம் - தற்பரனும்*
*நேமாய்ச் செய்தலையே வேண்டுகிறா னென்றார்கள்*
*சோமனைக் காட்டுநயி னார்* **415**

*மக்களுக்கு நன்மை பயக்கும் கருமங்கள்*
*இக்கணத்திற் செய்திங்கு வைத்தவைகள் - அக்கணத்தில்*
*கூடவந்து கைகொடுக்கும் கொள்ளைமணி யென்றார்கள்*
*வேடனுக்கும் புண்ணியம்சார் வேந்து.* **416**

## பாவம்

*சிறுபாவம் நாளாந்தஞ் செய்யும் பழக்கம்*
*பெருமழிவைக் கூட்டிப் பெருக்கும் - சிறுபாவம்*
*தானென்று செய்யேல் தரும்மோச மென்றுரைத்தார்*
*மானொன்றை வாழ்வித்த மன்.* **417**

*நல்ல சுவனபதி நாயன் வழங்குதற்குச்*
*சொல்லுந் தரமுண் டெனப்பகர்ந்தார் - வல்லார்*
*உதட்டின் தொடையி னிடைப்பொருள்கள் காக்க*
*பதற்றமிலை யென்பார் தமக்கு.* **418**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிகேளேல் கேட்டால்நீ கொள்நாற் பதுநாள்
செறிவணக்க முன்னைவிட்டு நீங்கும் - அறிவாயோ
அல்லாஹ்வை நம்பென்றார் அம்புவியோர் கொள்ளுநெறி
சொல்லால் வழங்குசெம் மல். 419

இறைவனுக் கொன்றை யிணைவைத்தல் ஈங்கு
நிறையன்பின் பெற்றோரை நோவல் - கறைமேவும்
பொய்ச்சான்று கூறல் பெரும்பாவ மென்றுரைத்தார்
உய்வாழ்வு கூறும் பிரான். 420

ஏசாதே பாவம் எந்தவொரு மூமினையும்
கூசாதே சொல்லால் குபிராகும் - பேசாதே
உள்ளம் வடுவாக என்றார்கள் எஞ்ஞான்றும்
எள்ளாத நாதர் நபி. 421

புன்னரக வாசலொன்றுள் போனவரும் எச்சரிக்கை
அந்நோயின் வாச லணுகாதீர் - சொன்னமொழி
வேந்தர்க்கு மேகநெறி வேண்டித் தெரிவித்த
ஏந்தல் நபிமுகம்ம தீங்கு. 422

பாவத்தைச் செய்தவனைப் பார்த்தால் விலகிடுக
தாவுமென் றெண்ணி வெறுத்திடுக - பாவத்தைச்
செய்வாரின் வர்க்கத்தில் சேரீர் எனமொழிந்தார்
உய்யும் வழிசொல்லு வோர். 423

கொள்ளை விபசாரம் கூடாக் குடிகொலையும்
விள்ளுஞ் சுவனத்தை மேவவிடா - தன்னில்
குலம்விலக்கும் கேடிவற்றைக் கொள்ளீரே யென்றார்
நலம்விளக்கும் நாயகனார் நாடு. 424

கொச்சை நரகின் கொடுமைகளை யஞ்சிமன
இச்சைக் கிசையா திருப்பவரே - நிச்சயமாய்
வெற்றி பெறுவா ரெனமொழிந்தார் ரிவ்வுலகப்
பற்றே யிலாத மகான். 425



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூதாடி ஈந்ததனைச் சொல்வோன் குடிகாரன்
கோதாடி யாமிவர்கள் கொள்ளாரே - போதாடி
இன்பந் தருஞ்சுவன ஏணிப் படியென்றார்
அன்பின் வடிவா மரசு 426

அல்லாஹ்வின் சாபம் அவன்தனது கோபமினும்
பொல்லா நரகம் தொடர்பாகத் - தொல்லைதர
யாருக்குஞ் சாப மிடாதீ ரெனவுரைத்தார்
பாருக் குணர்வூட்டும் மன். 427

பாவச் செயல்குறித்துச் சத்தியம் பண்ணாதீர்
பாவமே யன்னதனைப் பாரித்தல் - பாவமும்
புண்ணியமும் வேறு புலப்படுத்தும் நாயகரின்
கண்ணிய மாமுரையைக் கா. 428

வெட்கக்கே டுள்ள வியர்த்த குறும்புகுணத்
துட்டன் தனையிறைவன் தூஷிப்பான் - கெட்டவனை
நேசியா னென்றுரைத்தார் நேசக் கரம்நீட்டும்
மாசில் குணத்தின் மகான். 429

குற்றம் துருவித் திரிவா னொருவனின்
குற்றந் துருவு மிறையென்றார் - குற்றம்
பிறருக் குரையாத வேந்தனார் நீவீர்
மறந்தும் புகலீர் விடு. 430

அதிகாரம் பெற்றுலகின் ஆட்சிதனைக் கொண்டு
மதியாது மானுடரை வாட்டும் - அதிகாரி
பொன்னூர் மணமும் பொருந்தா னெனப்பகர்ந்தார்
நன்னெறியி லாளும் நபி 431

பாவச் செயல்களினாற் பங்கீட் டுணவினங்கள்
யாவும் வழங்கவுறும் நாள்தவறும் - பாவம்நீ
செய்திறைமேற் பாரம் சுமாத்தாதே நன்னபியின்
உய்வார்த்தை யூன்றி யுணர். 432

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கௌரவத்தைச் செல்வத்தை ஆசிக்க லாம்பிறரின்
கௌரவத்தைச் செல்வத்தைக் கண்டவர்மேல் - கௌவைதரு
ஆற்றாமை கொள்ளல் அதிபாவ மென்றார்கள்
பேற்றாற் சிறந்த பிரான். *433*

அல்லாஹ்வுக் கேது மிணையாக்கல் பெற்றெடுத்த
நல்லா ருளம்நலியச் செய்தவினை - சொல்லும்
பெரும்பாவ மல்லாஹ் பொறுப்பதிலை யென்றார்
அரும்போத ரண்ண லவர். *434*

கொள்ளை குடிமயக்கம் கூடா விபச்சாரம்
தள்ளும் கொலையுந் தவிர்த்தாக்கால் - விள்ளும்
சுவனம் அவருக்குச் சொந்தமா மென்றார்
இவைதவிர்த்த நாதர் நபி. *435*

## மது

மயக்கும் குடிபோதை வாடிக்கை யுள்ளோன்
தயக்கம் மிகுந்த நரகின் - வியர்நீரும்
ஊனும் குடிப்பாக ஊட்டப் படுவார்கள்
வானப் படிமீண்டார் வாக்கு. *436*

தீமைக் கெலாந்தாயாம் தீநரகின் பாதையாம்
ஆமாம் மதுவென்ப தாகாதே - சேமப்
பெரும்பாவ மஃது பிசகென்றா ரெங்கள்
அருமை நபிக ளறிந்து. *437*

## சூழ்ச்சி

சூழ்ச்சியால் மற்றவரைச் சூழ நினைப்பவரைச்
சூழ்ச்சி மிகையிறைவன் தன்னுடைய - சூழ்ச்சியினால்
வெல்லும் எனவறியார் வேதனையை யஞ்சாரே
புல்லும் அவர்சூழ்ச்சி புக்கு. *438*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை விசுவாசி உள்ளம் மிகநோகத்
திண்ணமாய் வஞ்சகஞ் செய்வோர்கள் - மன்னவனின்
சாபத்திற் காளாவார் சஞ்சலமே யென்றுரைத்தார்
கோபத்தை வென்றவெங் கோ. 439

## கோபம்

தேனின் சுவையை அறிந்தானை மாற்றல்போல்
ஈனஞ் சினம்மாற்று மீமானை- ஊனவழி
பித்தந் துறந்த பெருமானின் வாசகத்தை
நித்தம் நினைத்திடுதல் நன்று. 440

கோமான் நபிகளின் கொள்கைகளை மேற்கொண்ட
ஈமா னுறுதி யிதயத்தோர் - ஈமானை
கோபங் கெடுத்துவிடுங் கொள்ளாதீ ரென்றார்கள்
ஆபத்தி லுண்மை யறிந்து. 441

கோபங் கதித்தாற் பொறுமை பெறுபவனை
சாபக் கொடுமை சகிப்பவனை- ஆபத்தில்
கைதூக்கும் வல்லோனே காப்பா னெனமொழிந்தார்
மைபோக்கும் நாதர் நபி 442

## பொறாமை

பொறாமை பிடித்தவனும் பொல்லாத கர்வம்
அறாத உரத்தா னவனும் - பெறாரே
சுவர்க்கத்தின் வாயிலெனச் சொன்னார் நபிகள்
தவக்கத்தின் சாய லறிந்து. 443

மற்றவரைப் பார்த்து மறந்தும் எரியாதே
நற்றவத்தின் நன்மை நசுங்கிவிடும் - முற்றிழாய்
எச்சரிக்கை யென்றார்கள் ஏகன் திருத்தூதர்
அச்சம் பொறாமை அகல். 444

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெருப்பு விறகை எரித்துவிடு மாறு
எரிப்பு எரித்துவிடு மீங்கே - விருப்பமுடன்
செய்துவைத்த நன்மைகளை என்றார் திருமறையை
எய்துவித்த நாயகனா ரீது. 445

உன்கல்விச் செல்வத்தின் ஓங்கியரைக் காணுங்கால்
உன்னிலும் தாழ்ந்தோர் நிலையோர்க - மன்னன்
அளந்தபடி தானுண்டென் றாறி யிருக்க
நிழல்நாதர் சொன்னார் நமக்கு 446

விறகையெரி யுண்பதுபோல் வெய்ய எரிப்பும்
பெருகிவரும் நன்மைகளைத் தின்னும் - பிறருடைய
கல்விசெல்வம் கண்டெரிவு கொள்ளாதீ ரென்றார்கள்
நல்லறிஞர் நாதர் நபி. 447

செல்வத்தை யாசித்தல் குற்றமன் றின்னொருவர்
செல்வம் தனைக்கண் டிதயத்தில் - பொல்லா
எரிச்சல் அணைதலே குற்றமாம் என்றார்கள்
தருக்கொழிந்த நாதர் அறிந்து. 448

கவுரவத்தை யாசித்தல் குற்றமன்று மற்றொர்
கவுரவம் தனைக்கண் டிதயத்தால் - பொல்லா
எரிச்சல் அணைத்தலே குற்றமாம் என்றார்கள்
தருக்கொழிந்த நாதர் அறிந்து. 449

## சூது

சூதாடல் பெற்றார் சுகமழித்தல் தான்செய்த
ஏதாவ தீகை யெடுத்தியம்பல் - தீதாளும்
புன்னரகு சேர்க்கும் பொருளாகு மென்றுரைத்தார்
பின்னிகழ்வு பேசும் பிரான். 450

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குற்றம் ஆராய்தல்

*மற்றவரின் குற்றத்தை யாராய் வதிலுங்கள்*
*குற்றங் குறைகளை மீதியாய் - உற்றுணர்ந்தே*
*ஆராய்தல் மிக்க அவசியம் என்றார்கள்*
*சீராளர் நாதர் நபி.* 451

*குற்றம் பிறரைத் துருவும் ஒருவனது*
*குற்றம் இறையும் துருவுவனே - முற்றிழாய்*
*நல்லதையே சிந்திக்க நாயகனார் சொன்னமொழி*
*ஒல்லும் இறையின் உவப்பு.* 452

*சிந்தியுங்கள் மற்றவரின் குற்றங்க ளைவிடவும்*
*சொந்த உமது குறைகளையே - சிந்தியுங்கள்*
*நீங்கள் திருந்தும் வழியதுவே யென்றார்கள்*
*பாங்கான வாழ்வுரைத்த மன்.* 453

## பிறர் குறைநோக்கல்

*தங்குறை தீர்வுள்ளார் தக்கா ரிடைகாணும்*
*வெங்குறையைப் பேச விரும்புவதேன் - தங்குறைக்காய்*
*நோக்குபவர் மற்றார் குறைநோக்கா ரென்றார்கள்*
*வாய்க்கும் வகையறிந்த வேந்து.* 454

## செய்வினைப் பயன்

*மக்களிடை நல்லெண்ணம் நோக்கி வினைபுரியப்*
*புக்கவனின் அந்தரங்கக் கேடுகளை - ஹக்கன்*
*வெளியாக்கிப் பங்கப் படுத்துவான் என்றார்*
*ஒளிவாழ்க்கை காட்டும் பிரான்* 455

## தீச்செயலைத் தடுத்தல்

*தீச்செயலைக் கண்டால் திருத்தும் கரங்கொண்டு*
*வாய்ச்சொல்லா லாயின் அதுநன்றே - வாய்ச்சொல்*
*வாய்க்காது போனால் மனத்தால் வெறுத்திடுக*
*தூய்தான நாதர் துணிபு.* 456

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாவம் புரிவதனைப் பார்த்தும் விலக்காதும்
தாவும் அதனை விலகாதும் - பாவத்தைச்
செய்தவனைப் போலாவான் என்றார் சிறுபிழையும்
எய்தாத நாதர் இனிது. 457

## நன்னெறி உபதேசம்

நன்னெறியை மக்களுக்கு நன்கு தெரிவிப்போன்
நன்னெறியிற் சென்று நயம்பெறுவான்- நன்னெறியை
மூடி மறைக்காய் பொழியத் தயங்காதே
கோடை மழைநபியின் கூற்று. 458

## தலைவன்

மன்னிக்கும் மாண்பினனே மக்கள் தலைவனவன்
நன்னெறியிற் காக்கும் தவிசுடையோன் - அன்னவனை
மக்கள் தெரிந்தெடுக்கத் தக்கான் எனப்புகன்றார்
ஹக்கன் திருத்தூதர் தான் 459

## கீழ்மை

கெட்டவனை யெல்லாரும் கீழாய் மதிப்பவனைக்
கிட்டாதும் பேசாதும் விட்டவனே - கெட்டவருள்
மிக்கநெறி கெட்டவன் மேதினியில் என்றார்கள்
தக்கநெறி கூறும் நபி. 460

## கடனை மன்னித்தல்

கொண்ட கடனைக் கொடுக்க வழியின்றி
நின்ற மனிதனை மன்னித்தால்- தன்பேர்
அறுஷின் நிழலை யனுமதிப்பா னல்லாஹ்
குறைஷிப் பெருந்தலைவர் கூற்று. 461

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திட்டுதல்

குற்றமின்றி யோர்முஸ்லிம் சோதரனைக் காபிரென
வெற்றுரையாற் திட்டுவது வேண்டாமே- குற்றமின்றி
திட்டினா லக்குற்றம் திட்டினாரைச் சார்ந்துவிடும்
வட்டப் புவிநபியின் வாக்கு 462

## ஐயம் தவிர்

உண்டாகும் ஐயத்தை ஓட்டி வெருட்டுபவன்
தன்னரிய கண்ணியத்தை மார்க்கத்தை - புண்ணியமாய்க்
காப்பாற்றிச் சாந்தி படைப்பான் எனமொழிந்தார்
தூய்வாழ்க்கை காணும் நபி. 463

## பலத்திற் கேற்பவே பணி

சக்திக்கு மேம்பட்ட சங்கதியி லீடுபட்டு
மொத்தமாய்த் தோல்வி யடையாமல் - சக்தியினுக்
குட்பட்டக் காரியத்தைச் சாதிக்க வென்றார்கள்
நட்பிற் சிறந்தநயி னார். 464

## நோன்பில் பாவ மன்னிப்புக் கோரல்

உற்ற றமழானில் முன்செய் பிழைபொறுக்கப்
பற்றாதான் நாச மடையட்டும் - கொற்றவரின்
வேண்டலுக் காமீன் விளம்பினார் தூநெறியைப்
பூண்ட நயினார் புரிந்து. 465

## பேராசை

பேராசை கொள்பவருக் கெச்சரிக்கை தீதாகும்
பேராசை மிக்க தரித்திரம்காண் - தீரா
உபத்திரவ மாகுமதைக் கொள்ளாதீ ரென்றார்
தவத்திரு நாயகனார் தான். 466

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நல்லவர்

சந்ததியால் நல்லவராய்ச் சாற்றப் படுபவரே
பந்தமுளா ரெல்லார்க்கும் நல்லவராம் - இந்தவிதம்
சொந்தமுள உம்மத்தோர் சூதானம் போற்றுகின்ற
நந்தநபி சொன்னதனை நாடு 467

## இறைவனுக்காய் உவத்தலும் வெறுத்தலும்

அல்லாஹ் விரும்பும் பரிசா மொருவருடன்
அல்லாஹ்வுக் காக உவந்திருத்தல் - வல்லானாம்
அல்லாஹ்வுக் காக வெறுத்திருத்த லாமென்றார்
அல்லாஹ்வின் தூதர் அறிந்து 468

## இறையேவல் பணிதல்

அல்லாஹ்வி னேவல் அறிந்தமுறை செய்பவர்க்கு
வல்லான் கருணை வழங்கியவன்- இல்லாத
நல்லறிவை மிக்குவந்து நல்கு மெனவுரைத்தார்
அல்லாஹ்வின் தூதர் அறிந்து 469

## மன்னிப்பில்லாத் தவறு

பெற்றெடுத்த பெற்றாரின் பேச்சைச் செவிமடுத்துப்
பற்றி யொழுகாப்பிள் ளைகளின் - குற்றத்தை
அல்லாஹ் சிறிதும் பொறுப்பதிலை யென்றார்கள்
அல்லாஹ்வின் தூதர் அறிந்து 470

## சொல்லும் சொல்லுபவரும்

சொல்லின் பொருளையே ஓர்ந்திடுக சொல்லுபவர்
வல்வினையை யெண்ணாது விட்டிடுக - சொல்லுபவர்
எத்திறத் தாராயு மாகட்டு மென்றார்கள்
கர்த்தன் திருத்தூதர் கண்டு 471

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சாபம்

அஞ்சுங்கள் துன்ப அவலம் பெருக்கானோர்
நஞ்சனைய சாபம் மொழிவோர்க்கு - தஞ்சம்
தருமிறைக்கு முன்னே திரையில்லை யென்றார்
அருமை நயினார் அறிந்து 472

## சுய திருப்தி

உன்னிலும் செல்வத்தில் ஒன்றும் அழகதனில்
மின்னுவார் காண இருக்குங்கால் - உன்னிலும்
சின்னவர் கண்டு மனங்கொள்க என்றார்கள்
நன்னீர நாதர் நமக்கு 473

## தனக்குப்பின்

உங்கள் கடமைதனை யெல்லாம் முடித்தபின்பே
உங்கள் அயலார் கடமைகளை- தங்காது
செய்யுமா றேவுங்கள் சீராக என்றார்கள்
துய்ய இறைதூதர் தோர்ந்து 474

## கடனும் தர்மமும்

கேட்ட கடன்கொடுத்தல் தர்மம் இவையிரண்டில்
ஈட்டும் கடனே பலனதிகம் - கேட்டவரின்
தேவை நிறைவார்க்கும் தர்மம் தொழிலாகும்
சேவைக்காய் வந்தநபி சொல் 475

## நன்மை செய்யத் துண்டுதல்

நன்மைச் செயல்கூறி நல்லவழி காட்டுபவர்
நன்மை புரிந்துபலன் பெற்றாரே - அன்னவர்போல்
நன்மை அருளப் படுவா ரெனமொழிந்தார்
முன்சுவனம் போகும் நபி 476

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மோசடி

கல்வியில் மோசடி கைப்பொருளின் மோசடியில்
சொல்லும் இழப்பு வலிதாகும் - கல்வியில்
தேராது தேர்ந்ததாய் ஏமாற்றீர் என்றார்கள்
நேரான மார்க்கமருள் கோ. 477

## விரதம் அனுட்டித்தல்

வேத விதியாம் விரதம் அனுட்டித்தல்
பாதுகாப் புக்கேற்ற கேடயமாம் - ஆதலினால்
நோன்பைத் தவறாது நோற்றிடுக என்றார்கள்
ஆன்மக் குருநாதர் அன்று 478

## சுவனம் புகாத் தேகம்

சன்மார்க்கம் மாறிச் சமைந்த வுணவுண்டு
துன்மார்க்க மாய்வளர்ந்தத் தோருடலம் - பன்னும்
சுவர்க்கம் புகாதென்று செப்பினார் மின்னார்
தவக்கம் தவிர்த்த பிரான். 479

## சதிச் செயல்

உண்மையிலோர் பொய்வினையை உங்கள் சகோதரனைத்
திண்ணமென நம்பும் படிசெய்தல் - எண்ணம்
சதியாகு மென்றார் சணமும்பொய் யெண்ணாப்
பதிநாதர் வாழும் நமக்கு 480

## முகமன் கூறும் முறை

வந்தவர்க ளாங்கே யிருந்தவர்க்கும் வீடுகண்டு
வந்தவர்க ளாங்கே யிருப்பவர்க்கும் - முந்தை
வயதினர்க்கு வாலிபரும் வாய்வழங்கும் சாந்தி
நயமுடைய தென்றார் நபி 481


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உறவுக்குகந்தோர்

தீயவரைக் கேளாய்க் கொளவில் தனிமைநலம்
தூய தனிமையில் தூய்திசைக்க - ஆயநல்லார்
கூட்டுறவே மேலென்றார் கோதில் குணநலத்தார்
கூட்டுறவே வேட்ட பிரான் 482

## ஆகும் பணியை ஆற்றல்

தேக சுகமும் பலமும் உளன்தன்னால்
ஆகும் பணியை ஆற்றானேல் - ஏகன்
அருளை அடையானே ஐயகோ என்றார்
பெருங்கருணைப் பூண்ட பிரான் 483

## பிறர்க்குதவுதல்

மக்களுக்கு மக்களிப் பாரில் உதவுவது
புக்க மறுமைக்கோர் பொக்கிஷமாம் - மக்கள்
துயர்கண்டு தீர்க்கத் துணியுங்கள் என்றார்
உயர்வுக் கிணைகாணா வேந்து 484

## தருமபலன்

அக்கினியைத் தண்ணீர் அவித்து விடுவதுபோல்
பக்குவமாய்ச் செய்தருமம் பாவமதை - அக்கணமே
போக்கிவிடு மென்பதுவே பூவுலக வாழ்வதனைத்
தூக்குமுறை காட்டுநபி சொல். 485

## நொந்தவர் சாபம்

நொந்தவர் சாபத்திற் கஞ்சுங்கள் அன்னதற்கும்
அந்தமிலா அல்லாஹ் தனக்கும் - எந்தத்
திரையொன்று மில்லை தகிக்குமது என்றார்
கரையிலா அன்பின் கனி 484



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிறர் துன்பங் கண்டடு மகிழல்

நண்பன் துயர்கண்டு சந்தோஷம் கொள்ளாதே
அன்பன் அவனுக் கருள்புரிந்தே - உன்பக்கம்
துன்பத்தைத் தந்துன்னைச் சோதிக்க வுங்கூடும்
அன்பு நபிசொல் அமுது. 485

## வகுத்த விதி

எதுகரும மெப்பொழு தெவ்வா றிசையும்
அதுவிதித்தோன் ஆணையா லன்றி - புதுவிதமாய்
ஆவதில்லை உன்னை அலைக்காதே என்பதுவே
மாவலத்தார் சொன்ன வகை. 486

## காபந்து

நெருஞ்சிக் களைமுள் தெருவிலக்கிச் சென்று
வருகாலில் தைத்துப் பதைக்கும் - தெருவிலகார்
கால்குத்த முள்வருமா றில்லையே காவந்து
வேல்விழியாய் சொல்வாய் விதி. 487

## வஞ்சப் புகழ்ச்சி

இல்லாத நற்குணங்கள் சொல்லி யுமைப்புகழ்வோர்
இல்லாத துர்க்குணங்கள் மற்றொருகால் - சொல்லி
இழிவு படுத்தத் தயங்காரே யென்றார்
பழிபாவ மில்லா தவர். 488

## தந்தை தரும் சன்மானம்

நல்லொழுக்க மொன்றுதான் தந்தை மகற்குதவும்
சொல்லரிய சன்மானம் என்றார்கள்- நல்லதொரு
தந்தை யுதவியிலா நாயகனார் சொன்னமொழி
தந்தையர்க் கெல்லாம் தகும் 489



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அடங்காப் பிள்ளை

பெற்றாரைத் தாழ்ந்து நடக்காத பிள்ளைகளைச்
சற்றா கிலும்பிரிய நோக்கோடு - கொற்றவனும்
பார்க்கா னெனமொழிந்தார் பாரிற் பயந்தவர்தாழ்
பூக்கவிதி பூணார் புரிந்து 490

## வேலைக்கேற்ற கூலி

செய்த முயற்சிக் கதிகமாய் ஊதியத்தை
எய்த நினைத்தல் வியர்த்தமே- செய்த
முயற்சிக்குத் தக்க பயனையே கொள்வீர்
தயவுள்ள நாயகர் வாக்கு 491

## தானம் வேண்டாமை

தானம் தருமாறு யாரையுங் கேளேனென்(று)
ஆன மனவுறுதி யாள்பவர்க்கு - தானவனின்
நற்சுவன முண்டென்றார் தானமே வேண்டாத
நற்பண்பின் நாதர் நபி. 492

## நடைபாதைச் சுத்தம்

நற்செயல்க ளெல்லாம் அறமாகும் மாந்தருக்(கு)
உற்ற நடைபாதை மேற்காணும் - கற்களையும்
முட்களையும் நீக்குவது மேலாம் அறமாகும்
உட்பகையே யில்லா ருரை. 493

## குக்கல் வாய்வைத்த பாத்திரம்

குக்கல்வாய் வைத்த குடமுதற் பாத்திரத்தைத்
தக்கநீர் கொண்டு தரமேழும் - ஒக்குமுறை
மண்ணினா லோர்தரமும் வாய்ப்பக் கழுவென்றார்
விண்ணேறி மீண்டவெம் வேந்து. 494

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நட்பு

தீயாரின் நட்பில் தனிமை நலமாகும்
தோயும் பெரியாரின் கூட்டுறவோ - ஆயின்
தனிமையிலும் மேலென்றர் தற்பரனின் தூதர்
இனிமை பயத்த லறிந்து. 495

## உள்ளச் சிறப்பு

உங்கள் பொருளையோ உற்ற பதவியையோ
பொங்கும் புகழோன் பொருள்செய்யான் - உங்களுடை
உள்ளச் சிறப்பையே யோர்கின்றா னென்றார்கள்
உள்ளம் சிறந்தபூ மான். 496

## மேலான தருமம்

மேலாம் தருமமொன்று மேதினியெ லாம்விரும்பும்
சாலும்வாய் மக்களிடை சாந்திதரல் - கோலும்
சமாதானஞ் சாந்தி தருமென்றார் சாந்தி
சமாதான மார்க்கமருள் வார் 497

## சந்தர்ப்பத்தில் உதவாமை

சந்தர்ப்பம் நேர்ந்தும் சகோதரனின் பாவத்தை
வந்து விலக்காதும் வகையாதும் - சிந்தையிலே
கொள்ளா தவரந்தக் குற்றப் பயனைத்தான்
கொள்வா ரெனப்பகர்ந்தார் கோ. 498

## சோம் பேறி

தன்னுழைப்பால் வாழான் பிறர்தயவைப் பார்த்திருப்பான்
அன்னசோம் பேறியை யாதரிப்போன் - இன்னவர்கள்
எல்லோரும் குற்றம் புரிபவரே யென்றுரைத்தார்
நல்லாறு கண்டநயி னார் 499

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிரார்த்தனை

நாளுக்கிங் கைந்துமுறை நன்னீரிற் றோய்பவரின்
மேலுக் கசுசி விளையாபோல் - நாளுக்கோர்
ஐந்துவுழுச் செய்வாரின் பாவ மகலுமென்றார்
நைந்தாரைத் தூக்கும் நபி. 500

ஏகனுக் கீடுசெயான் இவ்வுலகை நீத்ததன்பின்
ஏகனது முன்னிலையை யெய்துங்கால் - ஏகனவன்
செய்பாவ மன்னிப்புச் செய்யுமெனச் செப்பினார்
பெய்மாரி போல்வழங்கும் வேந்து. 501

வணங்கப் படுபவன் அல்லாஹ்தான் பெண்ணாள்
வணங்குவாள் அல்லாஹ்வை அன்றி - வணங்குவரை
உண்டாயின் தன்கணவன் தானாகும் என்றார்கள்
கொண்டாடும் நாயகனார் கொண்டு 502

இறையச்சம் எல்லா நலனுக்கு மாதி
இறையச்சம் என்றும் மறவீர் - இறையச்சம்
உள்ளத்தில் ஊன்றி ஒருபோதும் நீங்காது
வள்ளல் நபிகளார் வாக்கு 503

இறையச்ச மொன்றொழிய எல்லா விதத்தும்
முறையில்லா மேற்றோர் சமமே- இறையச்சம்
கூறுபட வைக்குங் குறியென்றார் சூழ்தருமம்
ஆறுபட வைத்த அரசு 504

அல்லாஹ்வை யஞ்சுவற்(கு) எல்லாமே யஞ்சுமந்த
நல்லானை யஞ்சானை நாட்டிலுள - எல்லாப்
பொருட்கு மிறையவ னஞ்சவைப்பா னென்றார்
அருட்பிளம்பாம் நாதர் அறிந்து. 505

நாணம் மிகவுள்ளான் நாய னவனிடத்தில்
வேணும் எனவே விரித்தகரம் - வீணாகத்
தட்டிவிட நாணுகிறான் நல்கும் எனநவின்றார்
ஒட்டி யிரப்பீ ருவந்து 506

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல்லாமை யாருக்கும் குற்றமன் றிஸ்லாத்தில்
செல்வம் உயர்வளிப்ப தில்லைகாண்- அல்லாஹ்வோ
தன்னை வணங்குவரை நேசிப்பான் என்றார்கள்
அன்பின் மயமான வேந்து. 507

அல்லாஹ் விடம்மிகுந்த கண்ணியமாய் உள்ளது
நல்ல பிரார்த்தனையன் றொன்றில்லை - அல்லாஹ்
விரும்பியதை நீவிர் அதிகம் விரும்பும்
திருந்து மதங்கூறும் கோ. 508

வாரறுந்த காலணியை சீர்செய் முதலாகத்
தேருமுன்றன் தேவைகளை யெல்லாமே - கோரிடுக
உள்ளா னிடமன்றி மற்றொருவர் பாலில்லை
விள்ளும் நபிமொழிமேல் வைப்பு. 509

தந்தை மகனுக்காய்ச் செய்யும் பிரார்த்தனையும்
விந்தை பயணி பிரார்த்தனையும் - நொந்தலைந்து
பங்கப்பட் டாற்றா தழுவோன் பிராரத்தனையும்
அங்கீ கரிக்கப் படும். 510

தேவைகளை யீயுந் தரமீங் கெவருக்கும்
தேவைகளே யில்லோன் தரவில்லை - தேவைகளை
வல்லா னொருவ னிடமே வழங்கென்பீர்
சொல்லா லுறுதிநபிச் சொல். 511

இவ்வுலகம் மேனாளுக் கேற்ற விளைநிலமாம்
ஒவ்வும் சுபீட்சம் உறவேண்டின் - எவ்விதமும்
இல்லையெணால் முன்னேகை யேந்தும் எனப்பணித்தார்
நல்வழிகள் சொல்லும் நபி. 512

அநியாயந் தன்னில் அகப்பட்டோர் கேட்கும்
கனிவாம் பிரார்த்தனைக் கஞ்சும் - தனியான்
தனக்கு மதற்குந் தடுப்பில்லை யென்றார்
அநியாயஞ் செய்யா அரசு. 513

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தான்செய்த பாவத்தை எண்ணி மனம்வெந்துதே
ஏன்செய்தோ மென்றுருகி வெட்கித்தல் - வான்புகழும்
"தவ்பா"வை ஒக்குமெனத் தானோன் நபியுரைத்தார்
தவ்பாவைச் செய்தல் நலம். 514

மன்னிப்புக் கோரும் வழக்கம் மிகுந்தவர்க்கு
முன்னும் இடுக்கண் முதலோனே - முன்னின்று
தீர்த்துவைக்கு மென்று திருவுளஞ்செய் தார்நபிகள்
கூர்த்த பிரார்த்தனையைக் கேள். 515

உங்கள் பிரச்சினையை உன்னத மாக்குவதும்
தங்கும் பரிசுத்த மாக்குவதும் - உங்களுடை
அந்தஸ்த்தைத் தூக்குவதும் அல்லாஹ்வின் திக்றாகும்
சந்ததமும் திக்றிசைப்பார் கூற்று. 516

மற்றோர் முஸிலிமுக்காய் நாடி மறைந்தேத்திப்
பற்றும் பிரார்த்தனையும் பாழாகா - முற்றாகும்
என்றுரைத்தா ரெங்க ளெழிலார் நபிபெருமான்
நன்று விழைவீர் நலம் 517

நோன்பாளி நீதிபகர் நீதிபதி நோவினைகள்
போன்றவற்றால் வாடும் பொதுசனங்கள் - வேண்டிட
அங்கீ கரிக்கப் படுமென்றா ரீருலகும்
மங்காப் புகழ்படைத்த மன். 518

அல்லாஹ்வுக் காக எவன்தன்னைத் தாழ்த்துவனோ
அல்லாஹ் அவனை உயர்த்துவனே - சொல்லமுதம்
வள்ளல் நபிமொழிந்தார் மாண்பிற் சிறந்தவரே
உள்ளும் உரையை உவந்து. 519

வேண்டுதல் செய்வதனை அல்லாஹ் விரும்புகிறான்
வேண்டா தவனை வெறுக்கிறான் - வேண்டுங்கள்
நல்லன வற்றையே நாயனிடம் என்றார்கள்
அல்லும் இரக்கும் அரசு. 520

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்லாஹ்வின் பேரால் அடைக்கலங் கேட்பவருக்
கில்லையென்னா தாதரவு செய்திடுக - நல்லவரை
எந்நாளும் நேசிக்கும் ஏகன் திருத்தூதர்
சொன்னா ரிதனைத் துணி 521

செல்வச் சிறப்பைச் சிருங்கார வாழ்வதனை
அல்லாஹ் விரும்பா தெனவாகும் - சொல்லரிய
உள்ளமாம் ஒன்றனையே ஓர்கின்றா னென்பதுவே
வள்ளல் நபிசொல் வரம்பு. 522

நன்மைக ளாயிரம் நல்குவ னன்றியவர்
தின்மைக ளாயிரம் நீக்குவன் - முன்னவனே
நாளுக்கு நூறுமுறை தஸ்பீஹூ செய்பவர்க்(கு)
ஆளுற்ற நாதர் அமுது. 523

பூரண வீமான் பொருந்துவர் மானுடருள்
சீரணி சற்குணத்தார் தாமாகும் - வீரர்கள்
சாதனையா லிஸ்லாம் தழைக்கவைத்த நாயகரின்
போதனையா மென்றே புகல். 524

## மன்னிப்பு

தீமை பொறுத்தவர்க்கும் தீயனவே செய்தவரை
தாமாக மன்னிப் பளித்தவர்க்கும்- சீமானே
தன்பொறுப்பி லேற்றுவைத்துக் காப்பாற்று மென்பதுவே
மன்பதைக்கு நாயகனார் வாக்கு. 525

பொங்குங் குடியரைப் போதித்த மாமனிதர்
எங்கும் புகழ்மணக்கு மேந்தலர்சொல் - தங்கும்
தவறிழைப்பர் மாந்தர் அவர்தம்முன் மேலோர்
பவநீக்கங் கோருபவ ரே. 526

நற்குணத்தால் தீயவனை நல்லவனாய் ஆக்கல்செய்
அற்பபிழைக் காம்நன்மை யாற்றிடுதல் - பொறப்பிலார்
செய்தவற்றை மன்னித்தல் சீர்மூன்றால் மீசான்கால்
நொய்தகலும் நீதிபகர் நா. 527

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாளுக்கு நூறுமுறை நான் "தௌபா" ச் செய்கின்றேன்
வாழுமெ னும்மத்தோ ரானவர்கள்- நாளும்
நிகழ்த்துந் தவறுகளை நீக்கிவிடக் கோரல்
மகத்துவமா மென்றார் மகான். 528

தன்பாவ மெண்ணித் தருக்கொழிவார் தாபமது
கண்டவர் மன்னிப்புக் கோருமுனம் - முன்னோன்
அவர்பேர் பொறுத்திரங்கி யாதரிப்பா னென்றார்
எவர்நலனு மெண்ணுநபி யே. 529

பாவமே செய்துகொண்டு மன்னிப்புங் கோருவது
காவந்து செய்பவனின் கண்ணியத்தை - மேவார்
பரிகாசஞ் செய்தவனைப் போலென்றார் சீர்மை
வரிசை நயினார் வகைந்து. 530

செம்பிற் களிம்புபோற் செய்பாவ முள்ளத்திற்
செம்மிக் களிம்புபோற் சேருமே - அம்புவியில்
மன்னிப்புக் கோரினால் மாறும் எனமொழிந்தார்
உன்னிப்பா யெண்ணும் பிரான். 531

மின்னொளியும் மேவும் இடியொலியு முங்களுக்கு
மன்னவனி னச்சம் வருத்துங்கால் - முன்செய்த
பாவத்தை மன்னிக்கப் பண்ணவனை யேத்துங்கள்
யாவர்க்குஞ் சொன்னார் நபி. 532

மானிடர்கள் யாவரும் மாறிழைப்ப ரானாலும்
தானிழைத்த தையுணர்ந்து தற்பரன்பால் - மானிடர்பால்
மன்னிப்பு வேண்டுவரே மாநல்லா ரென்றுரைத்தார்
தன்னியல்பு வேண்டும் பிரான் 533

லாயிலாஹ் இல்லல்லாஹ் வென்னுந் திருக்கலிமா
தூய உளமறிந் தோதலிலும் - போயபவ
மன்னிப்புக் கோரலிலும் மாறாதீ ரென்றுரைத்தார்
மன்னிப்பே கோரும் பிரான் 534

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உற்ற ரமழானில் முன்செய்த பிழைபொறுக்கப்
பற்றாதான் நாச மடையட்டும் - கொற்றவரின்
வேண்டலுக் காமீன் விளம்பினார் தூநெறியைப்
பூண்ட நயினார் புரிந்து. 535

மன்னிப் பதனாற் சிறப்பதுவும் மாண்புடனே
பின்னிற் பதனா லுயர்வதுவும் - எண்ணித்
தருமந் தரலால் பொருளதுவுந் தாழாப்
பொருளை விரும்பார் பொருள். 536

பெற்றார்கள் நோவும் பெரும்பாவ மல்லாது
மற்றய பாவங் களையெல்லாம் - பொற்பன்
விரும்பின் பொறுத்திடுவான் வேண்டுங்க ளென்றார்
அருந்தவத்தின் நாயகனார் ஆங்கு 537

நாளாந்தம் மன்னிப்பு நாயனிடம் வேண்டுவார்க்குத்
தாளாத துன்பம் தவிர்வாக்கி - நாளாந்தம்
குன்றா உணவளிப்பான் கோமா னெனநபிகள்
ஒன்றும் படியுரைத்த தோர் 538

## மரணம்

சந்தூக் குடன்செல்லல் சந்தித்து நோய்வினை
அந்தி வருநாளை ஆய்வூட்டும் - சந்ததமும்
செல்லுங்க ளென்றுரைத்தார் செம்மல் நபிநாதர்
நல்லுரையைக் கைக்கொள்ள நாடு. 539

என்றும் மரணத்தை எண்ணி நடப்பவனும்
ஒன்றும் மரணத்தின் முன்னாகத் - தன்னைத்
தயார்செய்து கொள்வோனும் நல்லறிஞ ரென்றார்
நியாயம் பிறழாத வேந்து. 540

முன்னர் மரணித்தோர் மண்ணறையைக் காணுங்கால்
உன்னு முமதுள்ளத் தூசாட்டம் - தன்மரணம்
எவ்வா றெதிருமென் றெண்ணாதோ என்றார்கள்
நவ்விக் குதவும் நபி. 541

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எந்த மனுவுடலும் ஏறிவரும் சந்தூாக்கு
நின்னெதிரிற் கண்டால் எழுந்திருந்தே - அந்த
மனிதன் தனக்கு மரியாதை செய்க
புனித நபிசொல் மொழி. 542

## மறுமை

நீண்ட பயணம் மறுமை வழியதற்குப்
பூண்ட அமல்செய்து வைத்திடுக - தீண்டும்
மவுத்தொன்றே போதும் மனிதர்க் குணர்த்த
தவத்தினார் சொன்ன திது. 543

தட்டும் கனக்கும் தராசும் மகிழ்வூட்டும்
எட்டுக் குணநலனு மெய்தியதால் - தொட்ட
நலவிடறு தீர்ப்பளிக்கும் நாளிலா மென்றார்
குலமான குறைஷிக் கொழுந்து. 544

நேயினாற் பீடிக்கப் பட்டோரைச் சந்தித்தல்
போய ஜனாசாவைப் பின்தொடர்தல் - வேயும்
மறுமையை ஞாபகம் செய்யும் இரண்டும்
அருமை நபிகள் அறிவு. 545

நேச வலங்காரம் நீளழகு மற்றெவையும்
காசிவ் வுலகாசை காட்டவொணா - மாசுறைந்து
நின்றழியு மாதலினால் நீளுலக வாஞ்சையதே
நன்றென்றார் அண்ணல் நபி. 546

நன்மையோ தீமையோ ஆர்ப்பளவு நெய்தவரும்
தன்வினைக்குத் தக்க பிரதிப்பலன் - பின்னர்
மறுமைநாள் நிச்சயமாய் பெற்றாவர் என்றார்
உறுதியுரை பேசும் நபி 547


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சொர்க்கவாதி

கோமான் இறையல்லாஹ் கொள்கை நெறியிஸ்லாம்
சீமான் நபிமுஹம்ம தென்றுறுதி - ஈமான்
சுவையை யனுபவித்தார் சொர்க்க பதியில்
இவைசொன்னா ரெங்கள் நபி 548

மாந்தரிடம் யாசகம்நான் வாங்கே னெனவொருவன்
சூழ்ந்த வுறுதியுரை செப்புவனேல் - சாந்தி
பொருந்துஞ் சுவனம் புகலுறுதி யென்றார்
அருமை நபிக ளறிந்து. 549

புனித கலிமாவென் பொற்கோட்டை தன்னுள்
இனிது நுழைந்தவர்கள் அஞ்சார் - கனிவாய்
கடைத்தேறு மார்க்கமே கண்டார் சிலைகள்
உடைத்தெறிந் தார்வா யுரை. 550

பேறாம் சுவர்க்கம் பெறவிழைவார் நல்லறத்தின்
ஆறாம் கருமம் அணையட்டும் - நேரான
நல்லறமே வாழ்வில் நயக்கும் நபிமொழிந்தார்
சொல்லரிய தையெண்ணித் தேர் 551

நாளுந் தொழுவான் ரமழானில் நோன்பிருப்பான்
ஏழைக் குணவேது மீந்திடுவான் - நாளை
சுவனத்தின் வாழ்க்கை சுவாதீன மென்றார்
எவர்க்கு மினிய பிரான். 552

வாழ்விலுந் தாழ்விலும் வல்லவனைப் போற்றுபவர்
நாள்மறுமை சொர்க்கபதி நண்ணுவார் - தாழ்விலா
முன்னிலையா மென்று முஹம்மத் நபியுரைத்தார்
பன்னு சுபவிளக்கம் பார். 553

தன்னுணவிற் பானத்தில் தக்க அனாதைக்கும்
உண்ணவோர் பாகம் உதவிவரின் - அன்னவர்க்குச்
சொர்க்கத்தின் வாசல் திறக்கு மிறையென்றார்
நற்கதி காட்டும் நபி. 554



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வல்லானை யென்றும் வணங்கு வழங்கன்னம்
இல்லையென் றுன்னை யிரப்போர்க்கு - சொல்லு
சலாமுரையை யன்பர்க்குச் சார்வாய் சுவனம்
நிலாவழைத்த நாயகர்சொல் தேர். 555

சாந்தி மொழியுரைப்பீர் சார்ந்தார்க் குணவளிப்பீர்
வாய்த்த விராப்பொழுதில் நிம்மதியாய் - மாந்தர்கள்
தூங்க விழித்துத் தொழுவீர் சுவனபுலம்
தாங்குமுமை யென்றார் நபி. 556

நற்குணமும் நாயகனை யஞ்சுதலும் நன்மக்கள்
அற்புதமாய்ப் பல்லோர் அடையவைக்கும் - பொற்சுவனம்
என்ற நபிமொழியை ஏகத் துவமேற்போர்
நன்று தெளிவார் நயந்து. 557

கொள்ளை குடிமயக்கம் கூடா விபசாரம்
தள்ளுங் கொலையுந் தவிர்ந்தக்கால் - விள்ளும்
சுவனம் அவருக்குச் சொந்தமா மென்றார்
இவைதவிர்ப்பார் நாதர் இனம். 558

உண்மை யெனும்பெயரி லுண்டோர் சுவனவழி
உண்மை யுரைத்தா ருறும்வழியே - உண்மை
நிதமு முரைக்கட்டு முந்நாவென் றார்கள்
இதமே பயக்குமுரை வேந்து. 559

நாயனச்சம் நற்குணமும் நற்சுவனப் பண்பாகும்
தீயமொழி தீயோர் சகவாசம் - காயழலின்
புன்னரகப் பண்பாகும் போற்றீ ரிவையென்றார்
நன்னபிகள் நாதர் நமக்கு. 560

மக்களைத்தன்னாணையினால்வாட்டாது வேலைகொள்வோர்
சொர்க்கம் புகுவரெனச் செப்பினார்காண் - மக்களையே
அன்பினா லாதரித்த ஆலநபி சொன்னமொழி
இன்பந் தருமா மெமக்கு 561

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்லாஹ்வுக் காக அவனை வணங்குதற்(கு)
எல்லார்க்கும் பள்ளி யெடுப்பவற்(கு) - அல்லாஹ்
சுவனத்தி லோரில்லம் தோற்றுவிப்பா னென்றார்
தவமெத்த ஆற்றுநயி னார். 562

சொர்க்கத்தின் வாழ்வைச் சுதந்தரிகக் எண்ணுபவர்
தற்பரனின் வார்த்தை தலைக்கொண்டு - நற்கருமம்
தன்னா லியன்றமட்டும் சாதிக்க வென்றார்கள்
மன்னன் திருத்தூதர் கண்டு. 563

தானங் கொடுப்பான் தனியவனைச் சொர்க்கமதை
மானுடரை யண்மி மகிழ்ந்திருப்பான் - ஈனமுள
புன்னரகு மாத்திரம் தூரிக்கு மென்றுரைத்தார்
நன்னபிகள் நாதர் நமக்கு 564

## நரகவாதி

சொல்ல உதவாப்புன் வார்த்தையும் சூழ்ந்தொருகாற்
புல்ல உதவா ரிணக்கமும் - தொல்லையழல்
போக்கு மெனமொழிந்தார் பூதலத்தின் நாயகரும்
காக்க அறவுரையைக் கண்டு. 565

வர்க்கத்துக் கோர்முகமாய் வாய்வழங்குந் தன்மையினார்
நிர்க்கதியா யக்கினியால் நாவொன்று - தற்பரனால்
பூட்டப் படுவார்கள் பேசீர் முகம்வேறு
கேட்டை யெதிர்க்குநபி கூற்று. 566

உண்மை விசுவாசிக் குள்ளம் நலிவிக்க
திண்ணம் அவருடலம் நோகுவிக்க- எண்ணும்
ஒருவற் கிறைசாப முண்டென்றா ரெங்கள்
தரும நெறிகாண் நபி 567

மக்களை ஏமாற்றி வாழ நினைப்பவனீங்(கு)
எக்காலு மெம்மவனா யாகானே - தக்க
தொழில்செய்து வாழ்பவனே மேலாவான் என்றார்
எழுதிப் படித்தறியா வேந்து. 568

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தான்செய்த தீவினையை நாடியழு வான்சுவனம்
வீண்பழியை மற்றவர்மேல் வீசுபவன்- தான்நரகம்
செல்வா னெனப்புகன்றார் சீலம் உரைத்தநபி
நல்லுரைக ளின்று நமக்கு 569

## சலவாத்து

என்னுடைய நாமம் இசைத்திடக் கேட்டொருவன்
பன்னுசல வாத்துப் பகரானேல் - அன்னவனே
மக்களுள் மிக்க பகீலனா மென்றுரைத்தார்
மிக்க புகழ்க்குரிய வேந்து. 570

என்னுடைய நாமம் இசைத்திடக் கேட்டக்கால்
மின்னும் சலவாத்து விள்ளானேல் - அன்னவனே
மக்களிடை மிக்க உலோபியா மென்றுரைத்தார்
ஹக்கன் திருத்தூதர் காண். 571

உங்கள் சபைகளிலே யென்னாமம் உச்சரித்தால்
சங்கை சலவாத்தைச் சாற்றுவது - பொங்கும்
அலங்கார மாகு மதைவழக்க மாக்கல்
நலங்காணு மென்றார் நபி. 572

என்மீ தினிய சலவாத் திசைக்காதோர்
மன்சுவன மார்க்கம் மறந்தவரே - அன்னதனால்
நாளுஞ் சலவாத் நவின்றிடுக வென்றுரைத்தார்
வாழும் வகைசொன்ன மன். 573

நாயகத்தின் பேரில் சலவாத்தென் றோதுங்கள்
தூய இறைவ னருள்சுரந்து - மேயவொரு
பத்துச் சலவாத் துரைக்கின்றா னென்றார்கள்
இத்தலத் துள்ளாருக் கென்று. 574


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ISBN 978-955-7421-00-1

9 789550 122035

விலை ரூபா 400.00

Aashif A Buhary

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org